Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-07 | 22-12-2004 | புதன்கிழமை | ஓசை -308




# அரசாங்கத்தின் புதிய நிகழ்ச்சி நிரலை

# புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்கிறது

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

**சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் சமர்ப்பித்துள்ள புதிய நிகழ்ச்சி நிரலை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாக அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் "தமிழ்நெற்' இணையத்தளத்திற்குத் தெரிவித்தார்.**



நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று முன்தினம் அன்ரன் பாலசிங்கம் அவர்களை லண்டனின் சந்தித்தபோது எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை எடுத்துச்சென்று கையளித்துள்ளார்.

அரசாங்க சமாதான செயலகத்தின் தலைவர் ஜெயந்த தனபால, சூல் ஹெய்ம் ஊடாக இந்த நிழ்ச்சிநிரலை விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன் உள்ளடக்கத்தையோ இது குறித்த கருத்தையோ எதனையும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவிக்கவில்லை. குறித்த ஆவணத்தை தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்தார். எப்பொழுது இதற்கு விடுதலைப் புலிகள் பதில் அளிப்பார்கள் என்பதையும். அவர் தெரிவிக்கவில்லை என 'தமிழ் நெற்' இணையத்தளம் கூறுகின்றது.

# பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தற்போதைக்கு மிகக் கடினம்!

## - நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம்

தேக்க நிலையிலுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தற்போதைக்கு மிகக் கடினமான காரியமாகவே உள்ளது என்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை லண்டனில் நேற்றுமுன் தினம் சந்தித்துப்பேசிய பின்னர் தாயகம் திரும்பும் முன்னர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். கொழும்பில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் பேசிய விடயங்கள் குறித்து பாலசிங்கத்துக்கு சூல்ஹெய்ம் விளக்கிக் கூறினார். பாலசிங்கம் அவர்கள் புலிகளது நிலைப்பாட்டை வலியுறுத்தினார். புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் உரையில் வெளியிட்ட கொள்கை விளக்கத்தை மேற்கோள்காட்டி பேச

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழக்க வாய்ப்பில்லை

## அமெ. பிரதித் தூதுவர் நம்பிக்கை

தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போகக் கூடிய வாய்ப்பு இல்லை என அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று திருகோணமலையில் தொழில் நுட்பக்கல்லூரிக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்க பிரதித்தூதுவர் ஜேம்ஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## - மன்னார் முருங்கன் பகுதியில் -

# தலையற்ற முண்டமாக இளைஞரின் சடலம் மீட்பு

(செட்டிகுளம்)

மன்னார் முருங்கன் பள்ளகாமம் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் முண்டமாக நேற்று பொலிசாரால் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் மாவட்ட நீதவான் என்.எம்.எம்.அப்துல்லா விசாரனைக்கு உத்தரவிட்டுள்ளார்.


பள்ளகாமம் வயல் பகுதியின் பற்றைக்குள் நேற்றுக் காலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.வண்ணார் பண்ணைப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்.வண்ணார் பண்ணைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆண் ஒருவரது சடலம் நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த தம்பிராஜா சந்திரகுமார் (வயது 37) என்பவருடையது என இனங்காணப்பட்டது. வீதியில் கிடந்தே இவரது சடலம் மீட்கப்பட்டதாக யாழ்.பொலிசார் தெரிவித்துள்ளனர்.



# எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு ஆதரவாக கொழும்பில் ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்யக்கோரி நேற்றுக் கொழும் பில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஐ.தே.க. ஆதரவாளர்கள் கூடி மகாகள் எழுச்சி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

கடந்த புதன்கிழமை இவரது விடுதலையை வலியுறுத்தி அவரது தொகுதியான ஹிங்குராகன் கெட்டவிலிருந்து புறப்பட்ட பேரணி நேற்று மாலை கொழும்பு ஹைட் பார்க்கில் முடிவடைந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொள்வதற்காக தலைநகர் கொழும்பில் 4 முனைகளிலிருந்து 4 ஆர்ப்பாட்டங்கள் புறப்பட்டு மேற்குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்துடன் இணைந்து கொண்டன. இந்த ஆர்ப்பாட்டங்களில் சிவப்பு, நீலநிற சேலைகளினால் போர்க்கப்பட்ட நாய்களும கொண்டு வரப்பட்டன. வெலிக் கடைச் சிறைச்சாலை வீதி ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடத்தில்

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து ஜே.வி.பி யுடன் சந்திரிகா பேசுவாராம்

அடுத்த மாதம் - விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பாக வருடம் பிறந்ததும் ஜே.வி.பி. யுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறியவும் சனாதிபதி உத்தேசித்திருப்பதாகவும் அவை மேலும் தெரிவித்தன.

புலிகளுடன் பேச்சுக்குச் செல்ல முன்னர் கூட்டணிக்கட்சிகளுடன் பொது இணக்கப்பாட்டுக்கு வருவது என சனாதிபதி முடிவெடுத்துள்ளார் என்றும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மேசைக்கு உடன்வர நோர்வே பிரதமர் அவசர அழைப்பு



இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமாதான முன்னெடுப்புக்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நோர்வே நாட்டின் பிரதமர் செல்மக்னே பொண்டபிக் தெரிவித்துளளார். நேற்று நோர்வேயில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமாதானப்பேச்சுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படல் வேண்டும், மிகமுக்கியமான விடயம் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை உரிய முறையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

மீண்டும் இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் யுத்தத்தின் மூலம் இலங்கையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. இல.4 சிறி 4611, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எஸ்.அருள் நாதன், இல 117, நாதன்ஸ் ,குட் செட்செட்றோட் வவுனியா. (5410)

**வீடு விற்பனைக்கு**

புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக் கருகாமையில் 1/4ஏக்கர் காணி வீடு கிணறு, மலசலகூடம் என்பனவற்றுடன் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் "இனியவள் அழகுமாடம்" முல்லைத்தீவு. உரிமையாளர் இன்பம் மணிக்கூட்டுத்திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)


## கிளிநொச்சி மாவட்டத்தில் சைவ மங்கையர் கழக அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சைவ மங்கையர் கழகம் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி யோகர் சுவாமி திருவடி நிலயத்தில் (சித்தி உணவகம் முன்பாக) நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளோர் இணைந்து செயற்பட ஒன்று கூடுமாறு யோகர் சுவாமி திருவடி நிலையஅமைப்பாளர் திருமதி.ப.சிவனொளிபாதம் கேட்டுள்ளார்.

### -முல்லைத்தீவு மாவட்டத்தில்-

# 36.9விழுக்காடான குழந்தைகள் வயதிற்கேற்ற நிறையில்லாதோர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 36.9 விழுக்காடான குழந்தைகள் வயதிற்கேற்ப நிறையில்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார திணைக்களத்தினரால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் மாகாண சுகாதார சேவைப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையினால் மேற்கொள்ளப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குழந்தைகளின் போசாக்கு நிலை சம்பந்தமான ஆய்வின் விபரங்களை வெளியிடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குழந்தைகளின் போசாக்குத் தொடர்பான ஆய்வின் விளக்கங்களை முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி. ஜெயக்குலராஜா அவர்கள் வழங்கினார்.

இவ் ஆய்வின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் வயதிற்கேற்ற உயரம் இல்லாதோர் 8.2 விழுக்காடானோரும், உயரத்திற்கேற்ற நிறை இல்லாத குழந்தைகள் 21.3 விழுக்காடானோரும், வயதிற்கேற்ற நிறை இல்லாத குழந்தைகள் 36.9 விழுக்காடானோரும் உள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு 05 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தை அளவிடல், உலக உணவுத்திட்டத்தினால் 2005ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும் திட்டங்களுக்குரிய அடிப்படைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளல், நுண்நிலை தரவுகளினூடாக திட்டமிடல் நடைமுறைப்படுத்தல், உறுதிப்படுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்விற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் 5வயதிற்குட்பட்ட 13165 பிள்ளைகள் உட்படுத்தப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய அளவுடன் ஒப்பிடும்போதுஉயரத்திற்கேற்ற நிறை குறைந்த குழந்தைகள் வயதிற்கேற்ற உயரமில்லாத குழந்தைகள், வயதிற்கேற்ற நிறையில்லாத குழந்தைகள் ஆகிய குறைபாடுகள் அதிகரித்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதிலும் மல்லாவிப் பகுதியில் இதன் விழுக்காடு அதிகரித்துக் காணப்படுவதாகவும் இவ் ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி தாய்போசாக்கு திட்டஉதவிவெளிக்கள அலுவலர் சுகுணகுமாரி ரஞ்சித் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் நாயகன், உலக உணவுத்திட்ட வெளிக்கள அலுவலக மேற்பார்வையாளர் ரயன் அன்டர்சன் வவுனியாமாவட்ட உலகஉணவுத்திட்ட அலுவலகத் தலைவர் மபுப்புல் அலாம், கொழும்பு உலக உணவுத்திட்ட உதவி வதிவிடப்பிரதிநிதி ஜோன் ஈவ்ஸ் லெகும் ஆகியோரும், பிரதேச சுகாதாரத் தாதியர், மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச,தீ,20)

## 4ஆம் ஆண்டு நினைவு

மண்ணில் மலராய்
27 - 03 - 1963



மண்ணில் விதையாய்
22 - 12 - 2000

**லெப்டினன்ட் வீரக்கோன்**

(இம்ரான் பாண்டியன் படையணி)

**கணபதிப்பிள்ளை சோதிநாதன்**

அன்பின் பிறப்பிடமே- சோதி
ஆசையின் திருவுருவே
ஈழம் மீட்பதற்காய்
கரிகாலன் சேனையிலே
களம் கண்டு காவியமானாய்
ஆண்டுகள் நான்கு ஆனதையா உன் அன்பு முகம் காணாமல்
உம்மை எம் மனமும் மண்ணும்
என்றும் மறவாது

சமர்ப்பணம்

தகவல்:-
ப.பாலா
இல.707/7 ஆம் யூனிற்,
இராமநாதபுரம். (5430)

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## காணவில்லை

**சரவணமுத்து சின்னத்தம்பி**

சொந்தமுகவரி- கோப்பாய் வடக்கு, கோப்பாய்

தற்போதைய முகவரி- 3ஆம் யுனிற், யோகபுரம், மல்லாவி.

இவர் 14.12.2004 அன்று கனகபுரம்,கிளிநொச்சி எனும் முகவரியில் இருந்து வெளியில் சென்றவர் இதுவரை காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக் கத்துடனோ தொடர்பு கொள்ளவும்

Note:- 60 வயதுடைய இவருக்கு, தலைமுடி உதிர்ந்துள்ளதுடன் கால் முறிவு ஏற்பட்டு ஊன்று கோல் துணையுடனேயே நடப்பார். (வெள்ளை சேட்டும், சாரமும் உடுத்திருந்தார். இவர் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
**கதிரவேலு வயிரவநாதன்,**
இல:- 21,
3ஆம் கண்டம்
கனகபுரம், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம்
0212285874 (5433)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD)M9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், இப்பிரதேச சபையில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 22.12.2004 - 27.12.2004 வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 28.12.2004 நண்பகல் 12 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி - 28.12.2004 பி.ப.2 மணிக்கு

(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகளிக்கலாம்)

04. மூலக் கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம், மானிப்பாய். என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை தலைமையலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | வற்வரி 15% |
|---|---|---|---|
| பண்டத்தரிப்பு நல்லுண்ணி வீதி, புனரமைப்பு. | 4000/= | 500/= | 75/= |

**பி.விக்டர்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(சி-11049)

## காணவில்லை

சின்னத்துரை சிறிகுமார் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு கயஸ் வாகனத்தில் வந்து நந்தவனத்து வீதியில் தரித்து நின்றபோது SONY வீடியோ கைக் கமறா [1070169] இலக்கம் உடைய கமறா, கசற் உட்படக் காணமற்போயுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி புலிகளின்குரல் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இதனைக் கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கும், இது தொடர்பாகத் தகவல் தருபவர்களுக்கும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:-
**கு.கனகலிங்கம்,**
**கிளிநொச்சி.**

(5434)

# பயங்கரவாதத்தை ஒடுக்க

# வலுவான அரசு தேவை

## -ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின்



(மொஸ்கோ)


**பயங்கரவாதத்தை ஒடுக்க வலுவான அரசு தேவை அத்துடன் பயங்கரவாதத்தை ஒடுக் குவது ஒரு அரசின் தலையாய கடமையும் கூட என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் வலியுறுத்திக் கூறியுள்ளார்.**

இராணுவ அதிகாரிகள் விடு முறைக்காகச் செல்வதற்கு முன் னால் அவர்களிடையே பேசுகையில் இந்த அம்சத்தை அவர் வலியுறுத்தினார்.

'மத அடிப்படையிலும், இன அடிப்படையிலும் செயற்படும் தீவிரவாதக் குழுக்கள் நாட்டைப் பிளவுபடுத்திவிடாமல் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நாகரிக சமுதாயத்தைச் சீர்குலைக்கும் பயங்கரவாதத்தை வேரோடு ஒழிக்க வேண்டும். அதைச் செய்வதற்கு அரசு வலுவாக இருக்க வேண்டும்.

வலுவான சட்டங்கள், தெளிவான வழிகாட்டல்கள், உறுதியான நடவடிக்கைகள் போன்றவற்றுடன் நவீன ஆயுதங்களும், நல்ல பயிற்சியும் அவசியம். பயங்கரவாத செயல்களைத் தடுப்பதில் எந்தவித சமரசமும் கூடாது.

சர்வதேசப் பயங்கரவாதம் என்பது மக்களுக்கு அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் நேரடி அச்சுறுத்தலாகும், ரஷ்யாவுக்கு எதிராக இந்த ஆண்டு இதுவரை இருந்திராத வகையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன. கடந்த செப்ரெம்பர் மாதம் பயங்கரவாதிகள் பள்ளிக்கூடத்தில் நுழைந்து ஏராளமான மாணவர்களையும், அவர்களுடைய பெற்றோர்களையும் பிணையாகப் பிடித்துவைத்துக் கொண்டனர். அவர்களை மீட்கும் நடவடிக்கையில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு மட்டும் இச் செயல்களால் 440-இற்கும் மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். எனவே வலுவான அரசும் உறுதியான நடவடிக்கைகளும் அவசியம்' என்றார் புட்டின்.



*சில மாதங்களுக்கு முன்பு திறந்து வைக்கப்பட்டுள்ள வத்திக்கானிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் கடந்த திங்கள் வரை இதனை யாரும் அறிந்திருக்கவில்லை. இது ஒரு "கண்டு பிடிப்பு" என அந்நாட்டுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.*

# பேருந்து பள்ளத்தில் வீழ்ந்தது பெருநாட்டில் 49 பேர் பலி

பெருநாட்டின் வடபகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 49 பேர் பலியாகியுள்ளனர்.

மலைப் பாதையில் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து பாலத்தைக் கடந்து ஓடும் நதியில் 165 அடி ஆழத்தில் வீழ்ந்துள்ளது.

இவ் விபத்தானது மோசமான காலநிலை காரணமாகவே இடம்பெற்றதாக பேருந்து கம்பனி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொலைக் குற்றவாளிக்கு சவுதியில் மரணதண்டனை

(ரியாத்)

வாய்த்தகராறு முற்றி ஒருவரது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றவருக்கு, சவுதி அரேபியா மரண தண்டனை வழங்கியுள்ளது.

கொலை, கற்பழிப்பு, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கு சவுதியில் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட 52 பேருக்கு மரண தண்டனை வழங்கப் பட்டது.

ஒரு நபருடன் வாய்த் தகராறு முற்றியதால் அவரைச் சுட்டுக் கொன்ற அல்-அசிரி என்பவரைப் பொலிசார் சமீபத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்தக் குற்றத்திற்காக கடந்த வாரம் அவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. இதன் மூலம் இந்த ஆண்டு மரண தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது.



கியூபாவில் கண்டனமோ முகாமில் தடுத்து வைக்கப் பட்டவர் அல்ஹைதா, தலிபான் தீவிர வாதிகள்.

# கார்க் குண்டுத்தாக்குதல் குறித்து ஈராக்கில் ஐம்பது பேர் கைது

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதல் காரணமாக 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தத் தாக்குதல் வரும் சனவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே நடத்தப்பட்டதாக ஈராக்கிய அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் கலவரத்தைத் தூண்டிவிடவே முயற்சி செய்து வருவதாக சியாப் பிரிவு மதத்தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

# தலிபானின் தாக்குதலில் 04 ஆப்கான் பொலிசார் பலி

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் திடீர் தாக்குதல் நடத்தியதில் நான்கு ஆப்கானியப் பெலிசார் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் அதிபர் தேர்தல் நடந்து முடிந்தது. ஹமீத் கர்சாய் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டார். இருப்பினும், அமெரிக்கத் தாக்குதலால் விரட்டியடிக்கப்பட்ட தலிபான்கள் காந்தகார் மலைப் பகுதியில் ஒளிந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ள வெளிநாட்டுப் படையினர் மீது அவர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காந்தகார் அருகே உள்ள மேவந்த் மாவட்டத்தில் சந்தைப் பகுதி அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஆப்கானிஸ்த்தான் பொலிசார் மீது தலிபான்கள் திடீரென ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் நான்கு பொலிசார் பலியாகினர். அமெரிக்கப் படையினர் இரண்டு பேர் படுகாயமடைந்தனர். பாதுகாப்புப் படையினர் பதிலடி கொடுத்ததில் ஒரு தீவிரவாதி பலியானார். மூன்று பேர் தப்பிவிட்டனர்.

காயமடைந்த அமெரிக்க வீரர்கள் சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

# மத்திய கிழக்குப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு விடும்

## -அமெ.சனாதிபதி புஷ் நம்பிக்கை

மத்திய கிழக்குப் பகுதியில் நிலவும் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசியபோது பலஸ்தீன நாடு ஒன்றை ஏற்படுத்த இஸ்ரேலுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். அப்பகுதியில் அமைதியை மீண்டும் ஏற்படுத்த இது சரியான தருணம் என்றும். இதற்கு அடுத்த மாதம் பாலஸ்தீனத்தில் நடைபெறவுள்ள தேர்தல்கள் அதன் முதற்கட்ட நடடிவடிக்கையாக இருக்கும் என்றும் தெரிவித்த புஷ், எனினும் பாலஸ்தீனிய நாடு ஒன்று உருவாக்கப்பட்டால்தான் அங்கு அமைதி ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலேசிய ஒத்துழைப்புடன் ஹைதராபாத்தில் சர்.விமான நிலையம்

ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில் மலேசிய ஒத்துழைப்புடன் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங், இந்தியா வந்துள்ள மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமது பதாவி ஆகியோர் முன்னிலையில் டில்லியில் திங்கட் கிழமை அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்திய - மலேசிய கூட்டு முயற்சியில் ரூ.1,385 கோடி செலவில் ஹைதராபாத் அருகேயுள்ள ஷம்சாபாதில் இந்த விமான நிலையம் அமையும்.

இதற்காக ஹைதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் லிமிடெட் என்ற கூட்டு நிறுவனம் ஏற்படுத்தப்படும். இதில் மலேசியாவின் விமான நிலையங்கள் நிறுவனமான பெர்ஹாத் 11 சதவீதம், ஜி.எம்.ஆர் குழுமம் 63 சதவீதம், இந்திய விமான நிலையங்கள் ஆணையம் மற்றும் ஆந்திர மாநில அரசு 13 சாவீதப் பங்குகளையும் கொண்டிருக்கும்.



முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனசிர் பூட்டோவின் கணவன் அசிப் அலி சர்தாரி உஆவது முறையாகக் கைது செய்யப்பட்ட நிலையில் காணப்படுகிறார்.

# 87 சாதனைகள் புரிந்த அமெரிக்கர்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர் அஸ்ரிதா 56 வயதான இவர் சாதனைகள் செய்வதில் அதிக ஆர்வம் உள்ளவர். ஆரஞ்சு பழத்தைப் பல கிலோ மீற்றர் துரத்துக்கு மூக்கால் நகர்த்திச் செல்வது, தொடர்ந்து குட்டிக்கரணம் அடிப்பது, தோப்புக்கரணம் போடுவது போன்றவற்றில் இவர் இதுவரை 87 உலக சாதனைகளை ஏற்படுத்தி இருக்கிறார். இவற்றில் 27 சாதனைகள் 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இப்போது இவர் சீனாவில் ஒரு புதிய சாதனை ஏற்படுத்தி இருக்கிறார். கால்களில் கட்டைகளைப் பொருத்திக் கொண்டு கட்டைகளை தரையில் ஊன்றியபடியே 1 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றார். இதுவும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுகிறது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரிதநடவடிக்கை

# வெள்ளப் பாதிப்புற்றோருக்கு ஆறுதலளிப்பதாக அமைந்தது

## -கிளி.அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பாராட்டு

(அலுவலகசெய்தியாளர்)

**வெள்ளப்பாதிப்பிற்குள்ளாகி அல்லலுறும் மக்களுக்கு பிற நிறுவனங்கள் உதவுவதற்கு முன்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உடனடியாக தன்னிடமுள்ள நிதியினைப் பயன்படுத்தி மிக விரைவாக செயற்படுகின்ற தன்மையால் முகாம்களில் உள்ள மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்கள் என கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடுமையான மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 04 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் உள்ள மக்களின் நிலை மிகவும் மோசமாகியுள்ளது.

இவ்வாறு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்கின்ற பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடியாகவே செயற்பட்டது. உலக நாட்டு நிறுவனங்கள் தங்களுடைய உதவிகளை வழங்க முன் வருவதற்கு முன்பதாகவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பாதிப்பிற்குள்ளான அந்தந்த இடங்களில் செயற்பட்டு துரிதமாக மக்களிற்கு உதவி வருகின்றதை நாம் அவதானிக்கின்றோம் வெள்ளத்தில் சிக்கிய மக்களை பாதுகாப்பாக மீட்பது தொடக்கம், முகாம்களில் தங்க வைத்து பராமரிப்பது வரை தமிழர்புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் செயற்பட்டு வருகின்றார்கள். சில இடங்களில் இத் தொண்டர்கள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்துக் கூட நீந்திச் சென்று மக்களை மீட்டு வந்ததை நேரில் பார்க்கக் கூடியதாகவிருந்தது.


அரசால் மக்களிற்கு உதவ உரிய நிதி உடனடியாகக் கிடைப்பதில்லை. சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த உதவிகளைச் செய்வதற்கு பல வகையான கேள்விகளை கேட்டுக் காலம் தாழ்த்துகின்ற சூழ்நிலையில் த.பு.கழகம் தன்னிடமுள்ள நிதியை உடனடியாகவே பயன்படுத்தி மிக விரைவாகவே செயற்படுகின்ற தன்மையை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

வெள்ளப் பாதிப்பிற்குள்ளான மக்களைப் பாதுகாப்பாக மீட்டெடுத்தல், பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குதல், விசேடமாக பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் நோயாளர்களுக்கும் துரிதபோக்குவரத்து வசதி செய்தல், போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களில் உழவு இயந்திரங்கள் மூலம் மக்களின் பயணத்திற்கு உதவுதல், சிறுசிறு பாதிப்பிற்கு உள்ளான மக்களிற்கு இதர வசதிகளை வழங்குதல், வெள்ள அபாயம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தல், தொற்று நோய்கள் ஏற்படாதவாறு சுகாதார நலன்களைக் கவனித்தல் எனப் பல சேவைகளை முக்கியமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னின்று செய்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்றும் கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தெரிவித்தார். (சோ)

## நீர் போக்கிகள் வேண்டும்

(கிளிநொச்சி)

முறிப்பு ஸ்கந்தபுரம் பிரதான வீதியில் நீர்போக்கிகள் இன்மையால் மழைநீர் வீதிக்கு மேலால் பாய்ந்து இவ் வீதி வெகுவாக சேதமடைந்துள்ளது. எனவே இந்நீர் போக்கிகள் அமைக்கும் விடயத்தில் உரிய கவனம் செலுத்தும் வண்ணம் சம்பந்தப்பட்டவர்களை பொது மக்கள்கேட்டுள்ளனர். (15)



கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற மருத்துவ நூல் வெளியீட்டின் போது மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறுவதனைப் படத்தில் காணலாம். (படம்:-சோதி)

## அக்கராயன் பிரதேசஅபிவிருத்தி குறித்து தேசிய எழுச்சிப்பேரவை ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் அக்கராயன் பிரதேச அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரம் 1ஆம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில், பொது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அக்கராயன் பிரதேச பொறுப்பாளர் கரிகாலன், அரசியல் துறையைச் சார்ந்த அன்புமாறன் ஆகியோர் மேற்படி கலந்துரையாடலில் அக்கராயன் பிரதேச அபிவிருத்தி குறித்து சிறப்புரைவழங்கினர் (சோ)

# வவுனிக்குளம் அலைதாங்கி கட்டின் ஒருபகுதி தொடர்மழையால் இடிந்து வீழ்ந்தது!

## –அவசர நடவடிக்கையால் அபாயம் தவிர்ப்பு



(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உட்பட்ட வவுனிக்குளம் குளக்கட்டின் அலைதாங்கி கட்டு அண்மையில் பெய்த தொடர் மழையினால் இடிந்து விழுந்துள்ளது.

மேற்படி வவுனிக்குளம் அணைக்கட்டு எவ்வித புனரமைப்பும் இன்றி 20 வருடங்களாக இருந்து வருகின்றது். புனரமைப்புக்கான நிதிகள் வழங்கப் படாமையினால் குளக்கட்டு, வாய்க் கால்கள் கலிங்குகள் என்பன தூர்ந்த நிலையில் உள்ளன. சில இடங்களில் குளக் கட்டில் வெடிப்புகள் ஏற்பட்டும் உள்ளது. இதன்போது அண்மையில் பெய்த தொடர்மழையினால் அலைதாங்கிக் கட்டு மழை நீரினால் அரிப்பு ஏற்பட்டு இடிந்து விழுந்துள்ளது.

இதனை அவதானித்த நீர்ப்பாசன திணைக்களத்தினர் அவசர நடவடிக்கையாக மழை நீரினால் அரிப்புகள் எடுக்காமல் தடுப்பதற்கான வழிகளில் உடன் மண் மூட்டைகள் கொண்டு பெரும் சேதம் இன்றித் தடுத்துள்ளனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், கமக்கார அமைப்பினர், கமநலசேவை நிலையத்தினர் மக்கள் எனப்பலரும் குளக் கட்டுக்கு எவ்வித சேதமும் ஏற்படாமல் பாதுகாத்துள்ளனர் என வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் வ.தவக்குமார் தெரிவித்தார். (24)

## 5வயது நிரம்பிய சிறார்கள் பூங்காக்களில் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பூங்காக்களின் 5 வயது நிரம்பிய சிறார்களின் கௌரவிப்பு விழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு விஸ்வமடு இளங்கோபுரம் சோழர் சிறுவர் பூங்காவில் நடைபெற வுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்வகிக்கப்படும் சோழர், கலைமகள், சொக்கலிங்கம், பூங்காக்களில் பராமரிக்கப்படும் சிறார்களில் 5 வயது நிரம்பிய பாடசாலை செல்லவுள்ள சிறார்களின் மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தமிழீழ ஊரக வளர்ச்சி பணியினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## வட்டக்கச்சி காவல் பணிமனையால் குற்றத்தடுப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல் துறையினரால் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் அண்மையில் ஜொனிபுரம் பகுதியில் 2.5 லீற்றர் கசிப்பும், சம்புக்குளம் பகுதியில் 8 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டதுடன் மேற்படி குற்றச் செயலுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (15)

## முன்பள்ளியிலிருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

வள்ளிபுனத்தில் அமைந்துள்ள செந்தமிழ் முன்பள்ளியில் இருந்து தரம் 1 இற்குச் செல்லும் சிறார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது. முதலில் முன்பள்ளி முன்றலில் இருந்து முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் அணிவகுப்புடன் வள்ளிபுனம் கனிஷ்ர உயர்தர வித்தியாலயத்தைச் சென்றடைந்தனர். பாடசாலை மண்டபத்தில் முன்பள்ளி முதன்மை ஆசிரியை ஜெயலக்சுமி தலைமையில் சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

# மீண்டும் யுத்தம் ஏற்படுமானால் மனித உரிமை மீறல் மோசமாக இருக்கும்

## வவு.மாவட்ட நீதவான் இளஞ்செழியன்

(செட்டிகுளம்)

நாளை மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமானால் மனித உரிமை மீறல்கள் படுமோசமாக இருக்கும். இவ்வாறு வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவித்தார். கொழும்பு பல்கலைக் கழகத்தின மனித உரிமைகள் கற்கை பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் சிறப்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தகளம் எப்போது வேகம் கூடுகிறதோ அப்போது மனித உரிமை மீறல்களும் படுமோசமாக மீறப்படும். அடங்கி இருக்கின்ற யுத்தகளம் வெடிக்கும் போது மனித உரிமைகள் மறப்படும். கடந்த 90 ஆம் ஆண்டு யுத்தத்தின் போதும் அதன் பின்னர் 95 ஆம்ஆண்டு யுத்தங்களின் போதும் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. அந்த முதல் இரண்டு மாதங்களும் மிகவும் மோசமானதாக இருக்கும் சம்பவங்கள் தொடர்பாக வழக்குகள் விசாரிக்கப்படுவதில்லை. அவர்கள் எந்தப் புதைகுழிக்குள் சென்றார் கள் என்பதும் தெரியாது. ஆகவே மனிதஉரிமை என்பது சமாதானத்தின் அளவு கோல் எந்த நாட்டில் மனித உரிமை மீறப்படுகிறதோ, அந்த நாட்டில் சமாதானம் இல்லை என்பதே அர்த்தம். சமாதான காலத்திலும் மனித உரிமை அவசியம். அந்த மனித உரிமை பேணப்பட வேண்டும் என்றும் இலங்கையில் இருக்கின்ற சட்டங்கள் அனைத்தும் மிகவும் சிறப்பாக இருக்கின்ற போதும்அவை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படுவது மிகவும் குறைவாகவுள் ளது என்றும் அவர்கூறினார்.

மனிதஉரிமைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் மனித உரிமைகளுமசமாதானமும் என்ற தலைப்பில் வவுனியாமாவட்டநீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனும், மனிதஉரிமைகளும் அபிவிருத்தியும் சம்பந்தமாக சட்டத்தரணியும் விரிவுரையாளருமான எம்சிவபாதமும், மனித உரிமைகளும் யுத்தம் மற்றும் குற்றங்களால் பாதிக்கப்பட்டோரும் என்ற தலைப்பில் சட்டத்தரணியும்விரிவுரையாளருமான எம்.ஏ.எம்.ஹக்கீமும் மனிதஉரிமைகளும் கல்வியும் என்றதலைப்பில் சட்டத்தரணியும் விரிவுரையாளருமான எம்.சர்வேஸ்வரனும் உரையாற்றினார்கள் . (32)

### அதிரடிப்படை வீதி ரோந்து

அண்மை நாட்களாக மட்டக்களப்பு நகரப்பகுதி உட்பட வாழைச்சேனை, காத்தான் குடிப் பிரதேசங்களில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை வீதியால் செல்லும் சந்தேகத்திற்கு இடமான பயணிகளையும் விசாரித்து வருகின்றனர் என அறிய முடிகின்றது. (15)

# வீடுகளை விட்டு படையினரை வெளியேறக் கோரி

# முற்றுகைப்போராட்டம் நடத்த உசன் மக்கள் முடிவு

(தென்மராட்சி)

**தமது கோரிக்கையைப் படையினர் ஏற்காவிடின் படைமுகாம்கள் மீது முற்றுகைப் போராட்டம் ஒன்றை நடாத்த உசன்பகுதி மக்கள் தீர்மானித்துள்ளனர்.**

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் சுற்றுவட்டார பகுதிகளில் பொது மக்களின் வீடுகளை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் உடனடியாக இந்த வருட இறுதிக்குள் வீடுகளை விட்டு வெளியேறாவிடில் படையினர் ஆக்கிரமித்து தங்கியுள்ள முகாம்களாகவுள்ள வீடுகளை முற்றுகையிட்டு தொடர் மறியல் போராட்டம் செய்வதென மக்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதற்கான கலந்தாலோசனை கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் மதியம் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. படையினரின் ஆக்கிரமிப்பால் பாதிப்புற்றுள்ள வீட்டின் உரிமையாளர்கள், பிரதிநிதிகளுடன் நடைபெற்ற விசேட சந்திப்பில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

வரும் சனிக்கிழமை இறுதியாக வீடுகளை விடக்கோரி உசன் தலைமை படை அதிகாரியுடன் ஒரு சந்திப்புக்கு பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களின் பிரதிநிதிகள் ஏற்பாடு செய்திருப்பதாகவும்-நியாயமான எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில், வீடுகளை முற்றுகையிட்டு படையினரை வெளியேறக்கோரி போராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்று போராட்டக்குழுவின் தலைவர் ஆசிரியர் சரஸ்வதி அவர்கள் தெரிவித்தார். போராட்ட அறிவிப்பு குறித்து மகஜர்கள் பொது அமைப்புக்கள் ஒன்றியம், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் இராணுவ தலைமை (பலாலி) அரசியல் துறை(யாழ்ப்பாணம்) போன்றவற்றிக்கு அனுப்பியுள்ளதாக தெரிய வருகிறது. (28)

# இடநெருக்கடி குறித்து அறிவித்தும் இதுவரை நடவடிக்கை இல்லை

### -யாழ். சிறைச்சாலை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையினுள் இட நெருக்கடி நிலவுகின்றமை குறித்து சிறைச்சாலை அதிகாரிகளினால் உள்துறை அமைச்சக அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் அதற்கு உரிய நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்படவில்லை என யாழ்.சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சிறைச்சாலைக்குரிய அடிப்படை வசதிகள் அற்றநிலையில் இயங்கிவரும் யாழ்.சிறைச்சாலையில் ஆகக்கூடியது 100 கைதிகளை மட்டுமே ஒரே நேரத்தில் தடுத்து வைக்கமுடியும் எனினும் யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்கள் இடம் பெற்று வருவது அதிகரித்துள்ளமையால் இங்கு தற்பொழுது 300 தொடக்கம் 350 வரையான கைதிகள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக சிறைச்சாலைக் கூண்டுகளினுள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக கைதிகளிடையே கைகலப்புகளும், தொற்று நோய் பரவுகின்ற தன்மைகளும் இடம் பெற்று வருகின்றன என யாழ்.சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தகைய தன்மையால் கைதிகள் தடுத்து வைக்கப்படுதல் கூட ஒரு மோசமான மனித உரிமை மீறல் என மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

# தமிழர் படைப்பலத்தைப் பெருக்க இளைஞர்,யுவதிகள் முன்வர வேண்டும்

### -தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

மீண்டுமொரு கொடிய போரை எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட சிங்கள ஆட்சியாளர் திட்டமிட்டு வருகின்றனர். இக்கடினமான காலகட்டத்தில் தேசத்தின் தேவையறிந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தமிழர் படைப்பலத்தைப் பெருக்கவும் இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும் என தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சியில் இடம் பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில், இன்றைய இளைஞர் யுவதிகளிடத்தில் சுதந்திரம் பற்றிய சிந்தனை பல்வேறு அபிப்பிராயங்களை தோற்றுவித்து இருப்பதுடன் எமது விடுதலைக்கும் போராட்டத்திற்கும் இவை மிகவும் அப்பாற்பட்டதாகவே மாறியுள்ளதாக அவர் வேதனை தெரிவித்தார். அப்பாற்பட்ட வாழ்க்கை முறைக்குள் திசை திருப்பப்பட்டுள்ள இன்றைய இளைஞர்களின் வாழ்வை மீட்டெடுப்பதுடன், இளைஞர்கள் சமூகம் தனது தேசிய கடமையில் இருந்து தவறி சினிமா மற்றும் போதை உலகில் தன்னை அழித்து வருவதுடன் எமது சமூக கலாசார விழுமியங்களையும் கேள்விக்குள்ளாக்கி உள்ளனர். மீண்டும் ஒரு கொடிய போரை எம்மீது கட்டவிழ்த்து விட சிங்கள தேசமும் அதன் இராணுவ இயந்திரங்களும் திட்டமிட்டு வருகின்ற இக்கடினமான கால கட்டத்தில் தேசத்தின் உண்மையான நிலையறிந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க மக்கள் முன்வரவேண்டும். நாம் ஒன்றும்வேல்-வாள் கம்புடன் சண்டை போடுவதற்காகவல்ல நவீன உலகின் மாற்றத்திற்கு ஏற்ப எ[illegible] நாம் தயார்ப்படுத்த வேண்டியிருப்பதால் எமது படைப்பலத்தை பெருக்க பகிரங்கமாக முன்வரவேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. இதை உணர்ந்து இளைஞர் சமுதாயம் முன்வரவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (28)

# சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைக்க யுனிசெப் 18 இலட்.60 ஆயிரம் ரூபா வழங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள சுப்பிரமணியம் பூங்காவை புனரமைக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவரான உலகப் புகழ்பெற்ற வைத்திய நிபுணரான சுப்பிரமணியம் நினைவாக யாழ்.பொது நூலகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேற்படி பூங்கா கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் சிதைத்து தரைமட்டமாக்கப்பட்டது.

பின்னர் அதனைப் புனரமைத்து வளப்படுத்த யாழ்.மாநகர சபை மற்றும் ஏனைய உதவும் சர்வதேச நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால் யாழ்.கோட்டையையும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்பினைக் காரணம் காட்டி அதனைப் புனரமைக்க படையினர் தடைவிதித்தனர். இதனால் கைவிடப்பட்ட இப்பூங்காவின் புனரமைப்புப் பணிகள் தற்போது யுனிசெப்'' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு முதற்கட்டமாக 18 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை யுனிசெப் வழங்கியுள்ளதுடன் தொடர்ந்தும் இப்பணிகளுக்கு நிதி வழங்கும் எனவும் தெரியவந்துள்ளது.

# - யாழ். பொது நிறுவனங்களில் - ஊழியர் விபரங்களை சேகரிக்கும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள பொது நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரது பெயர் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல் என்ற போர்வையில் படையினர் இவ்வாறான விபர சேகரிப்புக்களில் ஈடுபடுவதால் பொதுநிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

பொது மக்களை அச்சுறுத்தும் விதமாகப் படையினர் மேற்கொண்டு வரும் இந் நடவடிக்கைகள் குறித்து பொது நிறுவன ஊழியர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர் கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களும், சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

# கோடாவை மறைத்து வைத்திருந்த பெண்மணிக்கு நீதிமன்று தண்டனை

(நல்லூர்)

வீட்டு அறையினுள் கசிப்பு காய்ச்சுவதற்கான கோடாவை புதைத்து வைத்து அதன் மேல் நாயை படுக்க வைத்திருந்த பெண்மணி வகையாக மல்லாகம் மதுவரித்திணைக்களத்திடம் மாட்டிக் கொண்டார்.

பலதடவைகள் மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சென்ற போதிலும் எந்தவொரு தடயமும் இவர்களுக்கு கிடைக்கவில்லை.

இறுதியாக எடுத்த நடவடிக்கை காரணமாக வீட்டின் நடுவே வெட்டி புதைக்கப்பட்ட நிலையில் 150 லீற்றர் கோடாவை மீட்டெடுத்து மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி.சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். ஊரெழு கிழக்கைச் சேர்ந்த பெண்மணியான சீவரத்தினம் கண்மணி என்பவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து 60 ஆயிரம் ரூபா தண்டனையாக விதிக்கப்பட்டது. உரியவர் தண்டப் பணத்தை முழுமையாக உடன் கட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

# தமிழக மீனவரின் அத்துமீறல் குறித்து பேச யாழ்.மீனவர்குழு இந்தியா செல்ல முடிவு

யாழ்.குடாநாட்டு கடற்பரப்புக்களில் இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்க சமாச சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்தியாவிற்குச் செல்லவுள்ளது.

அடுத்த சனவரி மாதம் முதல் வாரத்தில் (2005-தை) இந்தியா செல்லும் இக்குழு இந்திய மீனவர்கள் யாழ்.குடா கடற்பரப்புக்களில் ஊடுருவி கடற்றொழிலில் ஈடுபடுவதால் யாழ்.மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

இவ்வாறான ஊடுருவல்களால் இலங்கை- இந்திய தமிழ் மீனவர்களிடையே ஏற்படக்கூடிய பிளவுகள் இதனால் ஏற்படும் அரசியல் அபாயங்கள் என்பன குறித்து யாழ். மாவட்ட மீனவர்கள் குழு இந்திய மீனவர்களுக்கு விளக்கமளிக்கும் இந்தியாவின் மீனவர் சங்கக் கூட்டமைப்பு அண்மையில் யாழ்.மீனவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள விசேட அழைப்பின் பேரிலேயே இப்பயணம் இடம்பெறவுள்ளது. (33)

# மதுபோதையில் ஈருருளியை ஓட்டியவருக்கு சிறை

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் ஈருருளியை செலுத்திச் சென்றவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி.சறோஜினி இளங்கோவன் மூன்றுமாத கால கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன் ஈருருளியையும் பறிமுதல் செய்யும் படியும் தீர்மானித்துள்ளார்.

தெல்லிப்பழை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கந்தையா யோகராசா என்பவரே மதுபோதையில் ஈருருளியை செலுத்தி வந்த குற்றச்சாட்டின் பெயரில் சுன்னாகத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர் ஆகும். உரியவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (41)

# விடுதலைத் தீர்ப்பு கிடைத்தும் இந்.மீனவர் 14 பேர் தொடர்ந்து சிறையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களால் விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 14 இந்திய கடற்றொழிலாளர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படாது யாழ்.சிறைச்சாலையிலேயே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். வலிகாமம் மற்றும் தீவக கடற்பரப்புக்களில் அத்து மீறி கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வெவ்வேறு காலப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தியக் கடற்றொழிலாளர்களான இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் 10 பேருக்கும், மல்லாகம் நீதிமன்றத்தால் 4 பேருக்கும் ஏற்கனவே விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விடுதலை உத்தரவு பெற்ற 14 இந்திய கடற்றொழிலாளர்களையும் அவர்களின் தாயகத்திற்கு(இந்தியா)அனுப்பி வைப்பதற்கு அவர்களை கைது செய்த கடற்படையினரோ அல்லது இலங்கை வெளிவிவகார அமைச்சோ உரிய நடவடிக்கைகளை எடுக்காததினால் இவர்கள் தொடர்ந்தும் யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

## கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் எதிர் வரும் 24, 26 ஆம் திகதிகளில் காலை 8.30மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதன் போது கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளினை அபிவிருத்தி செய்தல், இதற்கான நிதி ஒதுக்கீடுகள், திட்டநடைமுறைகள் என்பன குறித்து ஆராயப் படவுள்ளது. (33)

# அவலநிலையிலிருந்து மீள வழி செய்க!



வெள்ள அனர்த்தம் காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டதன் விளைவாக மக்கள் அனைவரும் சொல்லொண்ணாத்துன்ப துயரங்களுக் குள்ளாகியுள்ளனர்.

வருடாவருடம் மழைபெய்யும், மழை கூடினால் வெள்ளம் பாயும், வெள்ளம் கூடும் பட்சத்தில் கிராம குடியிருப்புக்கள் வெள்ளத்தால் சூழப்படும் இந்நிலைமையானது இற்றைக்குப் பலவருடகாலமாக நடைபெற்று வரும் ஒரு தொடர் நிகழ்வாகும். பல விவசாயக்குடியேற்றக் கிராம மக்களுக்கு இந்நிலைமை பரீட்சயமாகிவிட்டது. பலவருடங்களுக்கு முன்பாக மக்கள் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பெற்ற பொழுது அதற்கெனக் குளங்கள் அமைக்கப்பெற்று அக்குளங்களின் நீர் மூலம் விவசாயத்தை மேற்கொள் ளும் வகையில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப் பெற்றன. மேலும் மக்கள் குடியமரக் கூடிய வகையில் அதற்கேற்ற பகுதிகள் தெரிவுசெய்யப்பெற்று மக்கள் குடியமர்த்தப் பட்டனர்.

குளத்திலிருந்து விளைநிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கென வாய்க்கால்களும், கழிவுநீர் செல்வதற்கான கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களும் அமைக்கப்பெற்று மழைகாலங்களில் வெள்ள நீர் மக்கள் குடியிருப்புக்களினுள் செல்லாதவாறு மண் அணைகளும் அமைக்கப்பெற்றதன்பின் மக்கள் குடியமர்த்தப் பெற்றனர் . அதன் பயனாக மக்கள் இங்கு விவசாயச் செய்கையினை மேற்கொண்டு வந்தனர். தற்போதும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் பல வருடங்களுக்குப் பின்பு தற்போது அந்த நிலைமாற்றம் கண்டுள்ள நிலையில் மக்கள் குடியிருப்புக்கள் உள்ள வீதிகள் யாவும் நீரோடும் வாய்க்கால் களாகவும், குடியிருப்புகள் பல பள்ளப்பிர தேசங்களாகவும் மாற்றம் கண்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக 1953ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிளிநொச்சி உருத்திரபுரத்தினை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பெற்ற மேற்படி குடியேற்றத்திட்டமானது மக்கள் மேட்டுநிலப்பயிர்ச்செய்கை, மற்றும் தாழ்நிலப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் வகையில் ஆரம்பிக்கப் பெற்றதாகும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கான சகல வசதிகளும் மேற்கொள்ளப்பெற்ற மேற்படி கிராமமானது இன்று மாரிகாலம் என்றவுடன் மக்கள் அக் கிராமங்களை விட்டு இடம்பெயர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமானது என்னவெனில் வெள்ளத்தின் தாக்கமாகும். மேற்படி உருத்திரபுரம் கிராமம் குறிப்பாக 8ஆம் யூனிற் முதல் உருத்திரபுரீஸ்வரம் சிவன் ஆலயம் வரையான பகுதி களில் அன்று தொட்டு பல வசதிகளுடன் எந்தவித பாதிப்புமின்றி வாழ்ந்து வந்த மக்களுக்கு இன்று இந்தநிலை ஏற்படக் காரணம் என்ன? இந்த அவலநிலையில் இருந்து மீள்வதற்கு வழியென்ன?

குறிப்பாக மேற்படி கிராமம் ஆரம்பிக்கப்பெற்ற பொழுது மக்கள் குடியிருப்பினுள் மழைவெள்ளம் உட்புகாத வகையில் 5கிலோ மீற்றர் நீளமான பாரிய அணையொன்று ஜெயந்திநகர் கிராமத்திலிருந்து உருத்திரபுரம் சிவன் சோலை வரை போடப்பட்டு மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் வெள்ள நீர் வழிந்து உருத்திரபுரம் சிவன்கோயில் குளத்தினைச் சென்றடையும் வகையிலும், மக்கள் குடியிருப்பினுள் வெள்ளம் உட்புகாத வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது.





வீதிகள் வாய்க்கால்களாக...



**கனகபுரச் சோதி**

இந்த அணையானது கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பராமரிப்பு ஏதுமற்ற நிலையில் பலத்த அழிவுகளைக் கொண்டுள்ள நிலையில் உள்ளதன் காரணமாகவே மேற்படிகிராம மக்களின் குடியிருப்புப்பகுதிகளில் வெள்ளம் உட்புக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏற்பட்ட மண் அரிப்பினாலே வீதிகள் யாவும் பாவனைக்குட்படுத்த முடியாத நிலை தோன்றக்காரணியாக அமைந்துள்ளதுடன் மக்களும் குடியிருக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலை மாறவேண்டுமெனில் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பெற்ற காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பெற்ற மேற்படி அணையினை மீண்டும் திட்டமிட்ட வகையில் புனரமைக்கப்பட வேண்டியது அவசியம். அந்தப் பணியினை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் இன்னுமொரு தசாப்த் காலப் பகுதியில் மேற்படி குடியிருப்புக் கிராமங்கள் யாவும் நிரந்தர வெள்ளப்பகுதியாக மாறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே திட்டமிட்ட புனரமைப்புப் பணியினை மேற்கொள்வதன் மூலமே மேற்படி கிராமத்தினையும், குடியிருப்பு மக்களையும் வரப்போகும் அபாயத்திலிருந்து மீட்க முடியும் என்பது திண்ணம்.

இதனைச்சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கவனத்தில் கொள்வது அவசியமாகும். இக்கிராமங்கள் மீண்டும் ஆரம்ப நிலைக் குத் திரும்ப வேண்டு மெனில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரின் திட்ட மிட்ட செயற்பாடுகள் முக்கியமாக அமைய வேண்டும் என்பது உண்மை. அத்துடன் மிக முக்கியமாக அந்தந்தக்கிராம அபிவிருத்திச்சங்கங்கள், கிராமசேவை அலுவலகங்களின் முக்கிய பங்களிப்புக்கள் இன்றியமையாத தொன்றாகும்.

இதனை விடுத்து மேற்படி கிராமங்களில் புனரமைப்புப்பணிகள் என்ற போர்வையில் வீதிகளைத் திருத்துவதனாலோ, அல்லது வெள்ள உதவிகளை வழங்குவதனாலோ எந்தவித நன்மையோ, முன்னேற்றமோ மேற்படிக்கிராமங்களின் மக்களுக்கு கிடைக்கப்பெறப்போவதில்லை. இந்தப்பாரிய அணையினை அமைக்காது மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் யாவும் கிராமம்க்களின் நிரந்தரப்பயன்பாடற்ற தொன்றாக அமைவதுடன் வீண் விரையம் என்பது திண்ணம்.

# தம்பலகமம் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கால் 75 சதவீத நெற்செய்கை அழிந்தது!

## - நிலைமைகள் இன்னும் சீரடையவில்லை

(திருமலை)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக தம்பலகமம் பிரதேசத்தில் 75 சதவீதமான நெற்செய்கை அழிந்து விட்டது. முள்ளியடிக்கிராமத்தில் நூறு சதவீதம் குடியிருப்பாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பதின்நான்கு மண்வீடுகள் வெள்ளத்தில் அள்ளுண்டுபோயின. திங்கள் காலை வெள்ள அழிவை நேரில் பார்வையிட்ட திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனிடம் ஊர்மக்கள் இவ்விபரங்களைத் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், தம்பலகமம் பொருண்மியப் பொறுப்பாளர் சாந்தன், அரசியல் துறைப்பொறுப்பாளர் இலக்கியன் மற்றும் ஊர்ப்பிரமுகர்களை தம்பலகமம் அரசியல் துறை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் அங்கு விரிவாகக் கூறப்பட்டது. வடிச்சல் வாய்க்கால் உடைப்பெடுத்ததால் நெற்செய்கைக்கு ஏற்பட்ட அழிவுகள் விவரிக்கப்பட்டன முள்ளியடி கிராமத்தில் கந்தளாய்க்குளத்தின் வானைத் திறந்து விட்டதால் ஏற்பட்ட வெள்ளம் கிராமமக்களையே இடம்பெயரச் செய்து விட்டதென்ற விபரமும் வெளியிடப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிவாரணம் மற்றும் உதவிகளை தாமதமின்றிக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உறுதியளித்தார்.

கந்தளாய், மின்னேரிக்குளம் ஆகியவற்றின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டதால், மூதூர் பிரதேசத்தில் வீதிகளின் மேலாக வெள்ளம் பாய்வதால் கந்தளாய் அல்லை வீதி பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் ஈச்சிலம்பத்தை, வெருகல்,மாவடிச்சேனை, பூநகர்ப் பகுதிகளுக்கு இடையேயான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வெட்டுவான், வெருகல், மாவடிச்சேனை போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிகளில் வாழும் அரச ஊழியர்கள் வள்ளங்களை தங்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவிவழங்கும் நிறுவனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுவதால் பாதிக்கப்பட்டவர்களின் சேதவிபரங்களைச் சேகரிக்க முடியாதிருப்பதாக நிறுவனங்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (25)

## வெள்ளநீரை அகற்றி பயிரைக் காக்க அறிவுரை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேசங்களில் தற்போது பெய்த தொடர் மழையினால் நெற்பயிர்ச் செய்கையில் சந்து குத்தி, மடிச்சுக்கட்டி,பை.ஈ போன்றவற்றின் தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு இருப்பதால் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களில் நிறைந்துள்ள நீரை வெளியேற்றி பயிர்களைப் பாதுகாக்கும் படி துணுக்காய்ப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் திருமதி பு.சிவபாலன் தெரிவிக்கிறார். (24)

**13**

* முகமாலைப் பகுதியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் இருவர் பலி.

* வன்னிப் பிரதேசம் எங்கும் பெய்த கன மழையினால் மக்கள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கினர்.



வெள்ளத்தால் அவலம்

* நாட்டுப்பற்றாளர் சொக்கனின் புக ழுடல் செம்மணி மயானத்தில் தீயுடன் சங் கமம்.

* வரணி மக்கள் தமக்கு மீள்குடிய மர்வுக் கொடுப்பனவு சீராக வழங்கப்படா மையைக் கண்டித்து யாழ்.செயலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

* நோர்வேயின் விசேட தூதுவர் இலங்கை விஜயம்.

* அக்கரைப்பற்றுப் பகுதியில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இல்க்காகி இளைஞன் பலி.

**14.**

* கூட்டுப்பயிற்சியில் கலந்துகொள்ள இரண்டு இந்திய கப்பல்கள் சிறிலங்கா கடற்படை தலைமையகத்தை வந்தடைந் தன.

* யாழ்.மாநகர சபைக்குட்பட்ட கொழும் புத்துறை பகுதியில் உள்ள இராணுவ காவ லரணில் கடமையாற்றி வந்த சிப்பாய் துப் பாக்கியால் சுட்டுத் தற்கொலை.

* தருமபுரத்தில் தாயாரை துன்புறுத்தி வந்த தந்தையை அடித்துக்கொன்று மகன் புதைத்தார்.

* பாதாள உலகக் குழுத்தலைவரும் சகாவும் நீர்கொழும்பில் சுட்டுக்கொலை.

* வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு உதவ கிளி.தமிழீழ திட்டமிடல் செயலகத்தில் செயலணிக்குழு அமைப்பு.

**15**

* சமாதான முயற்சிகள் தொடர்பில் அர சின் தீர்க்கமான நிலைப்பாட்டை சனாதிபதி தெரிவிக்க வேண்டுமென அமெரிக்கா, யப் பான், ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாக வலி யுறுத்து.

*நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சூல் ஹெய்மை சந்தித்த அரசியல்துறைப் பொறுப்பாளர் உள்ளிட்ட குழுவினர் சமா தான முன்னெடுப்புக்கள் குறித்து தெற்கின் நிலை நம்பிக்கை தருவதாக இல்லை. நோர்வேயும் அதனை வெளிப்படுத்தவில் லையென அரசியல்துறைப் பொறுப்பாளர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.



எரிக்குடன் சந்திப்பு

* லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வீர வணக்கக் கூட்டம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



வீரவணக்க கூட்டம்

* சிறிலங்கா அரசாங்கத்துடனும், விடுத லைப்புலிகளுடனும் அவசியமான கருத்துப் பரிமாறல்களை நடத்தினேன் என நோர்வே யின் விசேட தூதுவர் எரிக் தெரிவித்தார்.

* மட்டக்களப்பில் இனம் தெரியாதோ ரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இளைஞன் பலி.

**16**

*விடுதலைப்போராட்டத்தைக் கட்டியெ ழுப்ப ஓய்வின்றி உழைத்தவர் மறவன் மாஸ்ரர் என வடமராட்சி கிழக்கு தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடை பெற்ற வித்துடலுக்கான இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வேளை தமிழீழக் கடற்படை சிறப்புத் தள பதி சூசை தெரிவித்தார்.

* லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக் கள் ஆகியோரின் இறுதிவணக்கத்துடன் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.



துயிலுமில்லத்தில்...




* புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற வீதிவிபத்தில் பெண் ஒருவர் பலி.

* இந்திய-சிறிலங்கா கடற்படை கூட்டுப் பயிற்சி ஆரம்பம்.



கடலில் கூட்டுப் பயிற்சி

* கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் இடம் பெற்ற குண்டுவீச்சு சம்பவத்தைக் கண்டித்து கோட்டை தொடரூந்து மையத் தின் முன்னாள் சுயாதீன ஊடகவியாலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் ஆந்திராக்ஸ் பீதியால் மூடப்பட்டது.

* சனாதிபதி சந்திரிகாவை நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சந்தித்தார்.


**17.**

* ஐ.தே.கட்சியிலிருந்து தான் நீக் கப்பட்டமை சட்டவிரோதமானதெனக் கூறி ரோஹித் போகொல்லாகம மேல் நீதி மன் றத்தில் மனுத்தாக்கல்.

* பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதென சுதந்திரக்கட்சி மத்திய குழுகூடித் தீர்மானித்துள்ளது.

* இராமநாதபுரம் பகுதியில் உழவு இயந்திரப்பெட்டியிலிருந்து வீழ்ந்து சிறுவன் மரணம்.

* வியாபரி மூலை இம்பர் சிட்டி விநாயகா ஆலயக்கேணியில் சிறுவன் ஒருவன் சடல மாக மீட்பு.



பரிதாப மரணம்

* தமிழக மீனவர்கள் நான்கு பேர் யாழ்.சிறையில் இருந்து விடுதலை.

* நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரைச் சந்தித்தார்.

**18**

* அமரர் பூஜா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி கனகபுரம் மைதானத் தில் ஆரம்பம்.

**19**

* நாட்டில் சட்டத்தையும், அமைதியை யும் பாதுகாக்கும் நிறுவனங்கள் முறையாக இயங்கவில்லையென சனாதிபதி கண்டி யில் புதிய நீதிமன்றத் தொகுதியைத் திறந்து வைத்து தெரிவித்தார்.

* கொழும்பில் றோமன் கத்தோலிக்க தேவாலயத்திற்குத் தீவைப்பு.



தேவாலயத்தில்...

* மக்களின் விடுதலை அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளதென திருமலை மாவட்ட அபிவிருத்தி பற்றி கலந்துரையாடிய வேளை திருமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் தெரிவிப்பு.

* மேல் மாகாணத்தில் பரவலாக சில நிமிடங்கள் பூமி அதிர்வு ஏற்பட்டது.

---

## கோதுமை மாவிற்கு பெரும் தட்டுப்பாடு வவுனியாவில் மக்கள் நெருக்கடி!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் கோதுமை மா விற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்குகின் றனர்.

திருகோணமலையில் உள்ள பிறிமா நிறுவனத்திற்கும், அரசிற் கும் இடையில் ஏற்பட்ட விலைத் தகராறு காரணமாக கோதுமைமா விநியோகத்தை பிறிமா நிறுவ னம் திட்டமிட்டு கட்டுப்படுத்தி வரு கின்றது. இதனால் நாடுமுழுவதும் கோதுமை மா விற்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வவுனியாவில் பிறிமா நிறுவனத்தின் வடபகுதிக் கான விநியோக மையம் இருக்கின்ற போதும் வவுனியா வில் கோதுமை மாவிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. இதனால் வறிய மக்களே பெரும் பாதிப்பை எதிர் நோக்கி யுள்ளனர்.

வெதுப்பகங்களுக்குத் தேவை யான கோதுமை மா போதிய ளவில் விநியோகிக்கப்படாமை யால் வெதுப்பகங்கள் வெதுப்பக உற்பத்திகளைக் குறைத்துள்ளன. இதனால் வறிய மக்களின் பிர தான உணவான பாணுக்குத் தட் டுப்பாடு நிலவுவதனால் மக்கள் பெரும் அவதியுறுவதனைக் காணமுடிகின்றது. (10)

## இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் சண்டை, இசை, நடனக்குழு அமைப்பு

இலங்கை தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப்பிரிவின் மூலம் சண்டை(STUNT),நடனம் மற்றும் இசைக்குழுக்கள் அமைப் பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் இடம் பெற விரும்பும் இசை (பாடல்/வாத்திய)க் கலைஞர்கள்,நடனம் மற்றும் சண்டைப் பயிற்சிக் கலைஞர்களின் விண்ணப்பங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வரவேற்கப்படுகின்றன.

இக் குழுக்களுக்கான கலைஞர்கள் போட்டி முறையில் தெரிவு செய்யப்பட்டு இலங்கை மற்றும் இந்திய நிபுணத்துவமிக்க சினிமாப் பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படுவதுடன், இலங்கைத் திரைப் படங்களிலும் இலங்கையில் படப்பிடிப்புச் செய்யப்படும் வெளிநாட்டுத் திரைப்படங்களிலும் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும். இத்துறையில் ஆர்வமுள்ள இருபாலாரும் முழுவிபர மடங்கிய விண்ணப்பத்தினை, கடித மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'தமிழ்ப் பிரிவு-கலைக்குழு' என எழுதி," இலங்கை தேசி யத் திரைப்படக் கூட்டுத்தாபனம், த.பெ.இல-88, கொழும்பு" என்ற விலாசத்துக்கு 15.01.2005ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## தரமற்ற பாலத்தை மீளமைக்க காண்பிக்கும் தாமதத்தால் அவலம்!

புளியம் பொக்கணைச் சந்தியிலிருந்து கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு செல்லும் கோயில் வீதியில் கலவெட்டித் திடல் ப.நோ.கூ.சங்கக் கிளை கட்டடத்துக்கு அண்மையாகவுள்ள பாலம சேதம் அடைந்தமையால் கடந்த ஆடி மாதம் புதிதாக பாலம் கட்டப்பட் டது. எனினும் இப்பாலம் தரமற்ற முறையில் கட்டப்பட்டமையால் வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளரினால் திரும்ப உடைத் து கட்டுமாறு பணித்து உடைக்கப்பட்டது.

எனினும் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இப்பாலம் மீளக் கட்டப்படாமையால் இப்பிரதேச மக்களும், ஆலயத்துக்கு செல்லும் அடி யார்களும் போக்குவரத்து செய்ய முடியாமல் வீதி துண்டிக்கப்பட்டுள ளது. இதனால் மக்கள் தருமபுரம் ஊடாகவே தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.எனவே சம்பந்தப்பட்டவர்கள் பாலம் மீளக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக் கள் கோரியுள்ளனர். (14)

## கழிவுப்பொருட்களால் ஆபத்து

விசுவமடு சந்திப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் கழிவுப் பொருட் களை போட்டுள்ளதால் துர்நாற்றம் வீசுகிறது. சந்திப்பகுதியில் உள்ள பேருந்து தரிப்பிட மண்டபத்திற்கு அருகில் கழிவுப்பொருட்கள் போடப் பட்டுள்ளதால் பிரயாணிகள் பேருந்துக்காக மண்டபத்தில் நிற்க முடி யாது மிகவும் அவஸ்தைப்படுகின்றனர்.

சுவாசிக்க முடியாது மூக்கை கையால் பிடித்தவாறே நிற்பதைக் காணமுடிகிறது. வர்த்தகர்கள் பொறுப்பற்ற விதத்தில் மக்கள் தங்கி நிற்கும் இடங்களில் குப்பைகளை போட்டுவருவதையிட்டு மக்கள் விச னம் தெரிவித்துள்ளனர். இப்பகுதிகளில் ஆங்காங்கே கழிவுப் பொருட் கள் கொட்டுவதும் இவற்றை அப்புறப்படுத்தாது பலகாலம் அப்படியே காணப்படுவதும் சாதாரண விடயம் ஆகிவிட்டது. (14)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் எமது நாட்டுவளங்களை உறிஞ்சுகின்றன

### - சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா

இலங்கையில்அரசசார்பற்ற நிறுவனங்கள் என்றுகூறிக் கொண்டுபணியில் ஈடுபடும் சில அமைப்‘புக்கள் சுரண்டி வாழும் ஒட்டுண்ணிகளாகவே உள்ளன. என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான அரசசார்பற்ற நிறுவனங்களின் அமைப்புக் கொழும்பில் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய 44 அரச சார்பற்ற நிறுவனங்களில் பன்னிரண்டுக்கும் மேற்பட்டவை சிறந்த திறனோ, தமது கொள்கைகள் குறித்த தெளிவோ இல்லாதவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாவற்றையும் நம்ப வேண்டாம் என்று உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும், உலக வங்கி தமது திட்டங்களை அமுற்படுத்துவதற்கு இந்த அமைப்புக் களையே பயன்படுத்துகின்றன.

இந்த அமைப்புக்கள் திட்டங்களை அமுற் படுத்தவென பெருந்தொகையான பணத்தைப் பெறுகின்றன. அதில் சிறு தொகையை உதவி செய்கின்றன். சிலவேளைகளில் அதுவும் இல்லை. இந்த அமைப்புக்கள் எமது நாட்டுவளங்கள் அனைத்தையும் அப்படியே உறிஞ்சிக் கொள்கின்றன.” என்று அவர் அங்கு மேலும் கூறினார்.

“விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்ற பெயரில் கிராமப் புறங்களில் கூட்டங்களை நடத்தும் இவர்கள் மக்களுக்குப் பிழையான தகவல்களையும் வழங்கி வருகிறார்கள். அவர்களைக் கண்காணிக்கவென நான் ஒரு அமைச்சுக்குழுவை அமைத்துள்ளேன். அதன் மூலம் இவர்களது பிழையான நடவடிக்கைகளை அவதானித்து வருகிறேன்.

தாங்கள் ஏதோ இங்கு அற்புதங்கள் நிகழ்த்துவதாகத் தமக்குள் நினைத்துக் கொள்ளும் இவர்கள் செய்வது ஒன்றுமே இல்லை. ஆகவே ஒவ்வொரு நாளும் அறிமுகமாகும் அமைப்புக்களையெல்லாம் நாட்டுக்குள் அனுமதிக்காமல் சிறந்த-நன்மதிப்புள்ள-அரசசார்பற்ற நிறுவனங்களை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டும்” என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நிலைப்பாட்டிற்கு ஐ.தே.க ஆதரவு

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டை எதிர்க்கும் ஜே.வி பி தொடர்பில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டுடன் தமது கட்சி இணைந்து கொள் வதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்றுமுன் தினம் அந்தக் கட்சி இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. சமாதானம் தொடர்பாக இரட்டைக்கொள்கையை வெளிப்படுத்தி வரும் ஜே.வி.பிஇனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை காண்பதற்கு தடையாக இருந்து வருகிறது அதேநேரம் ஜே.வி.பியின் நிலைப்பாட்டுக்கு மத்தியில் இருந்துகொண்டு சனாதிபதி என்ன தீமானத்தை மேற்கொள்ளப்போகிறார் என்பதையும் தமது கட்சி அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கையில் தெரிவித்துள்ளது(32)


உன்னத விளைச்சலுக்கு உகந்த உரம்

இலங்கை உரம்

வழங்குநர் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பரந்தன்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

0777552843

யாழ்சாலை,
பரந்தன்.

(சி.10978)


## நினைவு கூருகின்றோம்

22.12.2000ஆம் ஆண்டு இதே நாளில் கைதடி, கோப்பாய், அரியாலைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின்போது வீரகாவியம் படைத்து வீரச்சாவடைந்த வட்டக்கச்சிப் பிரதேச 18 . எல்லைப்படை மா வீரர்களை நினைவு கூருகின்றோம். இதன்போது வீரச்சாவடைந்த அனைவரையும் இதேநாளில் நினைவு கூருகின்றோம்.

போராளிகள்/நண்பர்கள்.
மு.சுகீர்தரன், மு.பரந்தாமன்,
சே.சுதா, கு.குட்டி, த.மயூரன்,
ஜே.ரவி, சி.கலைவாணன்.

(5429)


அதி உன்னத
சுவையுள்ள முழு ஆடைப் பால் மா
முற்றிலும் இயற்கையானது
லக்ஸ்பிறே




கிளிநொச்சி மாவட்ட
முகவர்:- கரைச்சி வடக்கு ப.நோ.கூ/வுச் சங்கம்
பரந்தன்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

0777552843

முல்லைசாலை,
பரந்தன்

(சி.10979)


## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



தேசத்தின் விடுதலைக்காக தலைவனின்
சிந்தனையின் வடிவமாக எழுந்த
எல்லைப்படை வீரர்களாக-ஒரு தோளில்
குடும்பச்சுமையையும் மறு தோளில்
தேசத்தின் சுமையையும் தாங்கி
உறவுகள் அனைத்தையும் விட்டுப்
பிரிந்த எம் எல்லைப்படை மாவீரர்களை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

22.12.2000 அன்று கைதடி, நாவற்குழி, கோப்பாய் பகுதியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வட்டக்கச்சிப் பிரதேச எல்லைப்படைவீரர்களையும், அதேநாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

கலைவாணன்,
அரசியல்துறை,
மன்னார்.

(சி-11045)


SONY காட்சியறை



அரசகிளிகள்

(KING PARRATS)

வன்னிவாழ் மக்களுக்காக கிளிநொச்சி தமிழீழ வைப்பகத்திற்கு முன்பாக SONY காட்சியறை 09.12.2004 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கான ஒறிஜினல் சொனி ஏக விநியோகஸ்தர்களாகிய “கிங்பரட்ஸ்” ஸ்தாபனத்தார்களின் காட்சியறைகள் வவுனியா, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தற்பொழுது கிளிநொச்சி நகரிலும் “அரசகிளிகள்” என்ற பெயருடன் திறக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறார்கள்.

உலக SONY நிறுவனத்தின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர் சீடில்ஸ் பிறைவேற் லிமிரட், சீடில்ஸ் நிறுவனத்தின் வடபகுதிக்கான ஏக விநியோகஸ்தர் “கிங்பரட்ஸ்”.

2 வருட முழுமையான உத்தரவாதத்துடன் ஒறிஜினல் சொனி தயாரிப்புகளை வேண்டுவதற்கு நாடவேண்டிய நம்பிக்கையான இடம்.

அரச கிளிகள்,
தமிழீழ வைப்பகத்திற்கு முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

(சி.10964)

# தேர்தல் விதியை மீறி வாக்காளருக்குப் பணம் கொடுத்ததாக மத்திய ரயில்வே அமைச்சர் லல்லு மீது வழக்குப் பதிவு!

(புதுடில்லி)

தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்ததாகக் கூறி மத்திய ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத் யாதேவ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், அரியானா ஆகிய மூன்று மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்கள் வருகின்ற பெப்ரவரிமாதம் நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் கமிஷன் அண்மையில் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிட்டது.

அதன்படி பீகார் மாநிலத்தில் வருகிற பெப்ரவரி மாதம் 3,15,23, ஆகிய திகதிகளில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் அறிவிப்பு வெளியிடப் பட்டுவிட்டதால் தேர்தல் நடத்தை விதிமுறைகளும், உடனடியாக அமுலுக்கு வந்து விட்டன. இந்நிலையில் ராஜ்டிறிய ஜனதாத்தளம் கட்சியின் தலைவரும், மத்திய ரயில்வேத்துறை அமைச்சருமான லல்லுப்பிரசாத் யாதேவ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு பாட்னா திருப்பிக்கொண்டிருந்தார்.

பாட்னா அருகே உள்ள ஒரு கிராமத்திற்கு அவர் காரில் சென்றுகொண்டிருந்தபோது அங்கே காரை நிறுத்தி அந்தக் கிராம மக்களுக்கு 100ரூபா நோட்டுக்களைக் கொடுத்தார். தனது மடியில் வைத்திருந்த 100ரூபா நோட்டுக்களை அங்கே கூடியிருந்த கிராம மக்களிடையே வீசியெறிந்தார்.அந்த 100ரூபா நோட்டுக்களை அந்தக் கிராம மக்கள் ஆவலுடன் எடுத்துக் கொண்டு சென்றனர்.

இந்த நிகழ்ச்சியை அங்கே சூழ்ந்திருந்த வீடியோ, புகைப்படக் காரர்கள் படம்பிடித்தனர். கிராம மக்களுக்கு லல்லு பணம்கொடுக்கும் காட்சி அனைத்துத் தொலைக் காட்சிகளிலும் வெளியானது. லல்லுவின் இந்தச் செயலுக்கு பாரதிய ஜனதா உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. தேர்தல் நடத்தை விதிமுறைகளை லல்லு மீறியதாகத்தலைமைத தேர்தல் கமிஷனுக்கு பாரதிய ஜனதாக்கட்சி புகார் கொடுத்தது. இந்தப் புகாரின் அடிப்படையில் தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.எஸ்.கிருஸ்ணமூர்த்தி தலைமையில்தேர்தல் கமிஷனின் உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம் நேற்று முன் தினம் டில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு லல்லு மீது வழக்குப்பதிவு செய்யும்படி பீகார் மாநிலத் தலைமைத்தேர்தல் அதிகாரி சகாவுக்கு தலைமைத் தேர்தல் கமிஷன் உத்தரவிட்டது. அதன்படி பாட்னாவில் உள்ள மிர்தா பொலிஸ் நிலையத்தில் லல்லுப்பிரசாத் யாதேவ் மீது முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) பதிவுசெய்யப்பட்டது.பீகார் மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரி சகாவின் உத்தரவின் பேரில் லல்லு மீது இந்திய தண்டனைச்சட்டம் 171 பிரிவின் கீழ் பாட்னாப் பொலிசார் வழக்குப்பதிவு செய்தனர். தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி பொதுமக்களுக்கு பணம் பட்டுவாடா செய்ததாக லல்லு!மீது குற்றச்சாட்டுக் கூறப்பட்டுள்ளது.

பாட்னாவில் இம்மாதம் 23ஆம் திகதி மாபெரும் பேரணி நடத்த ராஜ்டிறிய ஜனதாத்தளம் முடிவு செய்துள்ளது. இதற்காகப் பாட்னா முழுவதும் பெனர்கள் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அலங்கார வளைவுகள், பெனர்கள் ஆகியவற்றை உடனடியாக அகற்றவேண்டும் என்று பாட்னா,மாயிஸ் திரேட்டுக்கு பீகார் மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி சகா உத்தரவிட்டுள்ளார். பொதுமக்களுக்கு பணம் பட்டுவாடா செய்தது தொடர்பாக பாட்னாவில் நிருபர்களுக்கு பேட்டியளித்த லல்லுப்பிரசாத் நான் எப்போதுமே ஏழைகளுக்குப் பணம் கொடுப்பேன்.அந்த வகையில் தான் வயது முதிர்ந்த தலித் பெண்களுக்குப் பணம் கொடுத்தேன் என்றார். ஏழைகளுக்கு உதவி செய்வதில் தேர்தல் விதிமுறை மீறல் எதுவும் இல்லை. "நான் ஏழைகளுக்குப் பணம் கொடுத்தேன் மற்றபடி நான் யாரிடமும் பணம் வாங்கவில்லை" என்றும் லல்லு நகைச்சுவையாகக் கூறினார். லல்லு மீது அவரது சொந்த மாநிலத்திலேயே வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பது அம் மாநிலத்தில பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

## பாரதிய ஜனதா கட்சி எதிர்ப்பு

(புதுடில்லி)

டில்லி பள்ளி மாணவன்-மாணவிகளுக்கு செக்ஸ் காட்சி களை விற்றதாக பாஸி.காம் இணையத்தளத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ள விவகாரத்தில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காண்டலீசா ரைஸ் தலையிட்டதற்கு பா.ஜ.கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பாஸி.காம் தலைவர் அவினிஷ் பாஜாவை டில்லிப்பொலிசார் கைது செய்துள்ளனர். அவினிஷ் பாஜா அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ளார். இந்நிலையில் இவருக்கு ஆதரவாக ரைஸ் வேண்டுகோள் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

மக்களவையில் திங்கட்கிழமை இந்த விவகாரத்தை கேள்வி நேரத்தின்போது எழுப்பினார் பா.ஜ.க உறுப்பினர் லக்ஷ்மணன் சிங்.

"அமெரிக்காவில் இம்மாதிரி விவகாரம் நடைபெற்றிருந்தால் அதில் தலையிட நமக்கு அமெரிக்கா அனுமதி தருமா?" எனக் கேள்வி எழுப்பினார்.

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 08 □ 07 □ 1982 | 22 □ 12 □ 2000 |

### லெப். கதிரழகன்

புஸ்பராசா விமலடாஸ்
(இம்ரான் பாண்டியன்)

பள்ளிப் பருவத்திலும்
பகைவன் கதை முடிக்கச்
சென்றவனே - விமல்
நீ சாகவில்லை தாயகக்
கனவில் உறங்குகின்றாய்
ஒருநாள் உன் கனவு எல்லாம்
நினைவாகும் இதை - நீ
பார்த்து மகிழ்வாய்


த.மு:- மின்வாரிய ஒழுங்கை, மல்லாவி.
சொ.மு. புளியங்கூடல், ஊர்காவற்றுறை

தகவல்:- பெற்றோர், சகோதரர்.

(சி-11048)

## மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின்

## அகண்ட தீபம் ஏற்றும் விழா



ஓம் சக்தி!

சென்னைக்கு தெற்கே 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது மேல் மருவத்தூர் திருத்தலம். இத்தலம் ஒரு சித்தர் பூமியாகும். அங்கு 21 சித்தர்களின் ஜீவசமாதி உள்ள இடமே சித்தர் பீடம். அங்கு அருள் திரு அடிகளார் அவதார புனிதராகத் திகழ்கிறார்.

அங்கு வலம் வரும் பக்தர்களின் உடல்பிணி அகலுகிறது.சிலருக்கு உள்ள பிணி நீங்குகிறது. பலருக்கோ ஊழ்வினையே குறைகிறது. ஆண்டுக்கொருமுறை ஆடிப் பூரத்தையொட்டி அந்த மண்ணிலே தன் பொன்மேனி உருண்டுவர அம்மாவே அங்க வலம் வந்து மண்ணைப் புனிதப்படுத்தி மகிமையூட்டுகிறார்.

இதனைப் போலவே நவராத்திரி விழாவும் மருவத்தூர் மண்ணில் மிக விமர்சையாகவும் மனித வாழ்வின் மேம்பாட்டுக்காகவும் கொண்டாடப்படுகின்றது. அதாவது நவராத்திரிக்கு முன் தினமான அமாவாசை தினத்தன்று அருள் திரு அம்மா அவர்கள் கருவறையில் சுயம்பின் முன்பாக தன் நாவினாலேயே அகன்ற தீபத்தை ஏற்றி, பின் அருள் நிலையில் பக்தர்களிடம் வந்து ஒருகன்னிப் பெண்ணையும், ஒரு இளவயதுச் சுமங்கலியையும்,இரு நடுத்தர வயதுச் சுமங்கலிகளையும், ஒரு வயதான சுமங்கலியும், ஒரு வயதான விதவையுமாக ஆறுபேரைத் தெரிவு செய்து ஏற்றப்பட்ட அந்த அகண்ட தீபத்தை அவர்கள் ஏந்தி வர மேளதாள வாத்தியங்கள் முழங்க திருக்கோயில் வலம் வந்து கருவறையில் வலது புறத்தில் வைக்கப்பட்டு பக்தர்கள் தங்கள் கைகளினால் அத்தீபத்திற்கு முக்கூட்டு எண்ணெய் விடுவார்கள். அந்த முக்கூட்டு எண்ணெய் விடுவதனால் மும்மலங்கள் கட்டுப்படும், தங்கள் முற்பிறவி வினைகள் தவிர்க்கப்படும். இனிவரும் காலங்களில் நடக்கப்போகும் கண்டங்கள் தடுக்கப்படும் நலமோடு வாழ வழிகாட்டும்.

அண்டம், பேரண்டம், பிரமண்டம் இருந்து அனைத்துச் தெய்வ சக்திகளும் ஆதிபராசக்தியினுள் ஐக்கியமாகி நவராத்திரியில் துர்க்கா, லஷ்சுமி, சரஸ்வதி எனும் முப்பெரும் தேவியராகி அருள் புரிகின்றார். அவர்களை முக்கூட்டு எண்ணெய் விட்டு வழிபடுவது சாலச்சிறந்தது.

இவ்வளவு பெருமை மிக்க இவ்வகண்ட தீபத்தை அம்மாவின் அருளாணைப்படி முல்லை, புதுக்குடியிருப்பு. 4ஆம் வட்டாரம், கோம்பாவிலில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் 24.12.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் மேல்மருவத்தூரில் இருந்து கொண்டு வரப்பட்ட அகண்ட எண்ணெய்கொண்டு அகண்ட தீபம் ஏற்றப்பட்டு, தொடர்ந்து மூன்று தினங்கள் எரிய விடப்பட்டு எதிர்வரும் 26.12.2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இவ் அகண்டம் குளிரவைக்கப்படும்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி எல்லாம் வல்ல ஆதிபராசக்தியின் அருளினைப் பெறுவோமாக.

"உலகமெல்லாம் சக்தி நெறி ஓங்க வேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும"

குருவடி சரணம்! திருவடி சரணம்

இங்ஙனம்.
**பரிபாலன சபையினர்,**
ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்,
4 ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

(சி-11047)

பண்டிகைக் கால பரிசு மழை!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

500 grams GOLD

முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20கிராம், 10கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உப முகவர்கள் ஊடாகப் பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரைத் தொடர்பு கொள்ளுங்கள் 011-2372333

ரூபாய் 250,000 இந்து மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்

AUTHORISED AGENT

WESTERN UNION
பணப்பரிமாற்றம்
நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
இச்சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

MMBL
Money Transfer(PVT) LTD
300,Galle Road, Colombo-03
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic

(சி-11115)

## கால்பந்தாட்டத்தை வளர்க்க சர்வதேச கூட்டமைப்பு உதவும்

இந்தியாவில் கால்பந்தாட்டத்தின் தரத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என சர்வதேச கால்பந்து கூட்டமைப்புத் தலைவர் ஜோசப் எஸ். பிளேட்டர் தெரிவித்துள்ளார்.

கால்பந்தாட்ட வளர்ச்சி குறித்து 11 பேர்கொண்ட சிறப்புக் குழுவை உருவாக்க சர்வதேச சம்மேளனம் கடந்த மே மாதத்தில் முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து தற்போது அந்தக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புக் குழுவின் முதலாவது கூட்டம் ஜுரிச்சில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அப்போது அவர் தெரிவிக்கையில்;

சர்வதேச அளவில் போட்டிகள் நடைபெறும் அட்டவணை குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நேரடிப் பேச்சுவார்த்தை மூலமும் ஒருங்கிணைந்த முயற்சிகளாலும் தான் இது சாத்தியம் என பிளேட்டர் கூறினார்.

## முன்னாள் அணித்தலைவர் ஹசாரேக்கு பிரிட்டிஷ் பத்திரிகைகள் அனுதாபம்

முன்னாள் இந்திய அணித் தலைவர் விஜய் ஹசாரே மறைவுக்குப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் இரங்கல் தெரிவித்துள்ளன. இந்தியாவின் தலை சிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவர். இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் இந்தியா கண்ட துடுப்பாட்ட நாயகன் ஹசாரே என பிரிட்டிஷ் ஊடகங்கள புகழாரம் சூட்டியுள்ளன.

"பந்தை வெட்டி ஆடுவதில் அதிசிறப்புப் பெற்ற ஹசாரே, அனைத்து விதமான பந்துகளையும் எதிர்கொள்ளும் துணிவு கொண்டவர் ரே.லிண்ட்வால்,கீத்மில்லர்,பில் ஜான்ஸ்டன்,அலெக் பெட்சர், பிரையன்ஸ்டாதம், பிரெட்டிரூமன், கிம்லேகர்ஆகிய திறமையானவர்கள் வீசிய பந்துகளை எதிர்கொண்டவர் ஹசாரே என டெல்லி டெல்லிகிராப் தெரிவித்துள்ளது.

## ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராக பிரேசிலின் ரொனால்டினோ தேர்வு



பிரேசில் நாட்டைச் சேர்ந்த முன்னணிக் கால்பந்து வீரர்களில் ஒருவர் ரொனால்டினோ, ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனா கிளப்புக்காக ஆடிவரும் இவர் இந்த ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராக தேர்வு பெற்றுள்ளார். இதைச் சர்வதேச கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு நடந்த உலகக் கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிரான கால் இறுதியில் அவர் அடித்த கோல் மிகவும் சிறப்பானது என்பது குறிப்பிடத்தக்கது.



சர்வதேச கால் பந்து தரவரிசையில் தொடர்ந்தும் மூன்றாவது வருடமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது பிரேசில் அணி. (அணித் தலைவர் கபு உலகக் கிண்ணததுடன் காணப்படுகிறார்.)


# அன்ரூஸ்ரோஸ் சிறப்பான துடுப்பாட்டம்

# முதல் டெஸ்டில் இங்கிலாந்துக்கு இலகு வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

போட் எலிசபேத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடி 337 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் டிப்பன்னர் 110, ருடெல்ப் 93, பொலக் 31 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஹொக்காட், பிளின்டொப் தலா 3 விக்கெட்டுக்களையும், ஹைஹல்ஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 425 ஓட்டங்கள், அன்ரூஸ்ரோஸ் 126, பௌச்சர் 79, ரெஸ்கொதிக் 47 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நிற்றினி 3 விக்கெட்டுக்களையும், ஸ்ரெயின், பொலக்,ஹால் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

88 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்கா 229 ஓட்டங்களை பெற்று



அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்சிமித் 55, கலிஸ் 61 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் ஜோன்ஸ் 39 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரைவிட ஹைஹல்ஸ், பிளின்டொப் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அன்ரூஸ் ரோசின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



முதல் இனிங்சில் 126 ஓட்டங்களைப் பெற்ற ஸ்ரோர்ஸ் இரண்டாவது இனிங்சில் ஆட்டமிழக் காது 94 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டியின் நாயகனாகவும் ஸ்ரோஸ் தெரிவானார்.

## இந்தியாவுக்கு எதிரான ஒருநாள்போட்டி வங்கதேச அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான வங்கதேச அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

வங்கதேச சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இதில் 2-0 என்ற முன்னிலையில் டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில் ஒருநாள் தொடர் வரும் 23 இல் தொடங்கு கிறது.

இதற்கான 14 போ கொண்ட வங்கதேச அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் முன்னாள் தலைவர் காலித் மகமூத் அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக டெஸ்ட் தொடரில் விளையாடிய ஜுபைர் நீக்கப்பட்டுள்ளார்.




## மாவீரர் வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி

கிளிநொச்சி மாவட்ட மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியின் ஏனைய போட்டிகள் எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மேற்படி போட்டிகளில் காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளை சமூகமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர்.

மேற்படி போட்டி காலநிலை சீரின்மையால் இடைநிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹர்பஜன்சிங் பந்தை வீசி எறிகிறார் ஐ.சி.சி.யிடம் போட்டி நடுவர்கள் புகார்

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன்சிங், வங்களா தேசத்துக்கு எதிரான தொடரின்போது இவரது பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருந்தது என்று போட்டி நடுவர்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி) சமீபத்தில் 'தூஷ்ரா' வகைப் பந்துவீச்சுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்தது. வங்களா தேசத்துக்கு எதிரானக சிட்டகொங் டெஸ்ட்டில் ஹர்பஜன்சிங்கின் தூஷ்ரா வகை பந்துவீச்சு எறியும் வகையில் இருந்ததாக நடுவர்கள் கருதினர்.

ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சுச் குறித்து 2-ஆவது டெஸ்டில் நடுவர்களாகப் பணியாற்றிய அலிம்தர்,மார்க் பென்சன் மற்றும் 3ஆவது நடுவர் மெகபூர் ரகுமான், போட்டி நடுவர் கிறிஸ் பிராட் ஆகியோர் ஐ.சி.சி.யிடம் புகார் கூறியுள்ளனர்.

நடுவர்கள் புகார் தெரிவித்ததை ஐ.சி.சி தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீட் கூறும்போது ஹர்பஜன்சிங் பந்து வீச்சுக் குறித்துக் கூறப்பட்ட புகாரை இந்திய கிரிக்கெட் சபையிடம் தெரிவித்துவிட்டோம் என்றார்.

ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சுக் குறித்து சர்ச்சை எழுவது இது 2-ஆவது முறையாகும். இதற்கு முன்பு 1998 ஆம் ஆண்டு அவர் பந்தை எறிவதாகக் கூறப்பட்டது. பின்னர் அவர் தனது பந்துவீச்சு முறையைச் சரி செய்தார்.

ஐ.சி.சி. வெளியிட்ட பந்து வீச்சு விதிமுறைகளுக்குப் பிறகு



பந்துவீச்சில் சிக்கும் ஆறாது வீரர் ஹர்பஜன்சிங் ஆவார். சபீர் அகமது(பாகிஸ்தான்) முரளிதரன் (இலங்கை), அப் துல் ரசாக்(வங்களா தேசம்) உட்பட 5 வீரர்களின் பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருந்தது. இதேவேளை தூஸ்ரா பிரச்சினை காரணமாக ஹர்பஜனுக்கு தடை ஏதும் விதிக்கப்பட மாட்டாது.இவர் சர்வதேச போட்டிகளில் வழக்கம் போல் பங்கேற்கலாம் என ஐ.சி.சி தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார். ஆனால் அடுத்து ஆறு வாரத்திற்குள் ஆய்வு செய்யப்படும். தவறு இருந்தால் எடுத்துக் கூறுவோம். பந்து வீச்சில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் அது பற்றி ஐ.சி.சிக்கு அறிக்கை அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

## அமரர் பூஜிதா ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி இறுதிப்போட்டிக்கு N.E.C, உழவர் ஒன்றியம் தகுதி

அமரர் பூஜிதா ஞாபகார்த்த 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் விளை யாட N.E.C அணியும், உருத்திர புரம் உழவர் ஒன்றிய அணியும் தெரிவாகியுள்ளன.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் முதலாவது போட்டியில் கனகபுரம் அணியை எதிர்த்தாடிய N.E.C அணி 31 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற N.E.C நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கனகபுரம் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

இரண்டாவது அரையிறுதியில் தர்மபுரம் இளந்தாரகை அணியை எதிர்த்தாடிய உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தாரகை முதலில் துடுப்பெடுத்தாடி 12.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 33ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய உழவர் ஒன்றியம் 11 ஓவர் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சுபானந், குமார், தனபாலன் ஆகியோர் கடமையாற்றினர். இறுதிப் போட்டி நாளை கனகபுரம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமதுதேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## அதிகாரத்தின் தேவை!

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கு வெள்ள அனர்த்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட அவலத்தினைக் கண்டறியவெனவும் நிவாரணப் பணிகள் பற்றிப் பரிசீலிக்கவும் சிறிலங்காப்பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அப்பிரதேசங்களுக்குச் நேற்று முன்தினம் சென்று திரும்பியுள்ளார். அங்கு அரச அதிகாரிகளையும், இராணுவ அதிகாரிகளையும் சந்தித்து நிலைமையை ஆராய்ந்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யும்அமைச்சர்களன்றி கொழும்பில் பணிபுரியும் அரசஅதிகாரிகள் எத்தகைய பணிநிமிர்த்தம் சென்றாலும் படைத்துறை அதிகாரிகளைச் சந்திப்பது வழக்கமானதொன்றாகிவிட்டது. அதாவது சிவில் நிர்வாகம் என்பது அங்கு இராணுவ மயப்பட்டதாகியுள்ளது என்பதே அதன் அர்த்தமாகும்.

இது ஒருபுறம் இருக்க-மழை வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டு- வீடுகளை விட்டு வெளியேறி ஒரு வாரத்திற்கும் மேலாகிவிட்டது. அதிலும் ஒரு தொகுதியினர் வெள்ளம் வடிந்து மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். ஆனால் சிறிலங்காவின் பிரதமரின் விஜயமானது மக்கள் வழமைக்குத் திரும்பத் தொடங்கியுள்ள நிலையில் இடம்பெற்றிருப்பதில் இருந்தே இவர்கள் இப்பகுதி மக்களின் நலன்களில் இத்தகைய கரிசனையாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தத்தக்கதாகும்.

பொதுவில் இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்படுமானால் ஆட்சியிலுள்ள தலைவர்கள் நேரில் பார்வையிடுவது வழக்கம். அனர்த்தங்கள் ஏற்பட்டு ஓரிரு தினங்களுக்கு இது நடைபெறுவதுண்டு . அவ்வேளையிலேயே அனர்த்தத்தினால் செயற்பட்ட அழிவுகளையும் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளையும் கண்டறிய முடியும்.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அந்த வகையில் விரைவாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆறஅமர வெள்ளம் வடிந்து, மக்கள் மீளக் குடியேற முற்படும் வேளையிலேயே பிரதமரின் விஜயம் அமைந்துள்ளது. அதாவது மக்களுக்கு அன்றாட உணவும், தண்ணீரும் தேவைப்பட்டபோது வழங்க முன்வராத அரசாங்கம் தற்பொழுது வெள்ள நிவாரணம் என்ற ரீதியில் ஆற அமர சில, அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளது.

ஆனால் இவ்வாறு அறிவிக்கப்பட்ட வெள்ள நிவாரணப் பணிகளாவது வழங்கப்படுமா? அன்றி அறிவிப்புடன் அதுவும் நின்றுபோகுமா? அவை வழங்கப்பட்டாலும் கூட வெள்ள நிவாரணம் சரியாக உரியவர்களைச் சென்றடையுமா? சரியான முறையில் பங்கிடப்படுமா? என்பது போன்ற கேள்விகளும் உண்டு.

இது ஏதோ குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவேண்டும் என்ற அடிப்படையில் கண்மூடித்தனமாகக் கேட்கப்படும் கேள்விகள் அல்ல. இவை கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் கேட்கப்படும் கேள்விகள் ஆகும். 1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டதைக் கடும் சூறாவளி தாக்கியபோது இதனால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கவென சர்வதேச நாடுகளிடமிருந்து பெரும்தொகை உதவிகள் சிறிலங்கா அரசிடம் வந்து குவிந்தன. ஆனால் அவை பங்கிடப்பட்ட போது அவை சூறாவளியால் பெரும் அனர்த்தங்களிற்குள்ளான தமிழ் மக்களுக்கு பங்கிடப்படாமல் சூறாவளியின் கடும் தாக்கத்திற்கு உட்படாத பகுதிகளில் வாழ்ந்த சிங்களவர்களுக்குப் பங்கிடப்பட்டமை கடந்தகால நிகழ்வாகும்.

இது ஒருபுறம் இருக்க காலம் தாழ்த்தியாயினும் அரசாங்கம் இதை உளப்பூர்வமாக மேற்கொண்டுள்ளதா? என்பது கேள்விக்குரியதே ஏனெனில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்ற சில அரசசார்பற்ற நிறுவனங்களது கூட்டுக்களும் வேறு சில நிறுவனங்கள்,அமைப்புக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக வெள்ள நிவாரணத்திற்கென மேற்கொண்ட பிரச்சாரம், நடவடிக்கை என்பனவற்றாலும் அரசாங்கம் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்தது. என்பதே உண்மையாகும்.

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களுக்கு வெளியிலுள்ள தமிழ் மக்களிடம் இருந்து உதவிகள் வழங்கல் பொதுவில் கிடைக்கப்பெற்றமை சற்றுத் தாமதமே ஏனெனில் தொடர் மழையினால் கிழக்கு மட்டுமல்ல வடக்கும் பாதிக்கப்பட்டதும். நிவாரணப்பணிகள் மேற்கொள்வதைத் தாமதப்படுத்தியதாக அமைந்தது.

ஆனால் அரசாங்கத்தின் இவ் வெள்ள நிவாரணப் பணிகள் அசமந்தமானதாகவே இருக்கும் என்பது எதிர்பார்க்க முடியாததல்ல ஏனெனில் இரண்டு விடயங்கள் தாமதத்திற்கு அடிப்படையானவையாகவுள்ளன. ஒன்று பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் சிறுபான்மை இனத்தவராக இருப்பது. இரண்டாவது சிறிலங்கா அரச அதிகாரிகளின் அசமந்தமான செயற்பாடு. இத்தகையதொரு நிலையில்தான் தமிழ்மக்களின் கைகளில் நிர்வாக அலகு ஒன்று இருப்பதன் அவசியம் உணரப்படுகின்றது. இதன் காரணமாகவே யுத்த அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளான தமிழ்மக்களுக்கான நிவாரண அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை விடுதலைப்புலிகள் கோருகின்றனர். ஆனால் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே மனிதாபிமான உதவிகளைச் செய்யப் பின்னடிக்கும் அரசாங்கம் யுத்தத்தினால் தம்மால் அழிக்கப்பட்டவற்றை புனர்நிர்மானமும் அபிவிருத்தியும் செய்ய அமைப்பொன்றை வழங்க முன்வருமா? என்பதே இன்று முக்கிய கேள்வியாகும்!

-வடக்கு- கிழக்கு மாகாணத்தில்

# காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை!

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2005 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள 46,000 வீடுகள் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் அப்பிரதேசத்தில் அரச காணிகளில் வசிக்கின்ற மக்கள் தாம் வசிக்கின்ற காணிகளின் உரிமை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் மாவட்ட மட்டத்தில் தீர்வு காணப்படவுள்ளது. இதன் பொருட்டு வடக்கு கிழக்கின் உள்ள 8 மாவட்டங்களிலும் மாவட்ட காணிச் செயலணிக் குழுக்களை நிறுவுவதற்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.. 2004 டிசம்பர் 15 ஆம் திகதியில் இருந்து செயற் படும் இந்த மாவட்ட காணி செயலணிக்குழுக்கள் 09 மாதங்களுக்குள் மக்களின் குடியிருப்புக் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக விரைந்து செயற்பட்டு தீர்வுகளைச் செய்யவுள்ளனர்.

இதுபற்றி மேலும்தெரிய வருவதாவது,

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரம் (326,000) வீடுகள் சேதமடைந்துள்ளன. இவ்வாறு தமது வீடுகளை இழந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறியிருப்பின் அவர்கள் தங்களின் வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக உலக வங்கி வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் நிதியுதவிகளைவழங்கவுள்ளது. முற்றாக சேதமடைந்த சேதமடைந்த வீடென்றினை மீள் நிர்மாணிப்பதற்கு ரூபா.1,50,000 மும் பகுதியாக சேதமடைந்த வீட்டினை திருத்துவதற்கு ரூபா.70,000 மும் தவணை அடிப்படையில் வங்கியின் மூலம் நன்கொடையாக பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த உதவிகளைப் பெறுவதற்கு தகுதியுடைய எந்தவொரு குடும்பத்தவரும் தாம் வாழும் காணி உரிமைப்பிரச்சினை காரணமாக அத்தகைய உதவிகளை இழந்துவிடக் கூடாது என்பதற்காகவே மாவட்ட காணிச் செயலணிக் குழுக்கள் முன்னோடி நடவடிக்கைகளை எடுப்பதன் பொருட்டுஉருவாக்கப்பட்டுள்ளனர். இக் குழுக்கள் வடக்கு கிழக்கில் அண்ணளவாக இனங்காணப்பட்ட 75,000 அரச காணிப் பிரச் சினைகளுக்கு தீர்வு காணவுள்ளனர். இதன் மூலம் வீட்டு உதவி நன்கொடையைப் பெறுவதற்கு உரித்துடைய குடும்பம் ஒன்று தனது வீடு அமைந்துள்ள காணியின் உரிமைக்கான ஆவணம் இல்லாத காரணத்தால் உதவி பெறும் தகுதியை இழக்கும் ஆபத்தில் இருந்து மீட்கப்படுகின்றது.

அரச காணிகளிலே வசிக்கின்ற மக்களுக்கு அக்காணி தொடர்பான வலிதான ஆவணமின்மை, வழங்கப்பட்ட ஆவணம் கைவசமின்மை , 1995 ஆம் ஆண்டு யூன்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அத்துமீறிப் பிடிக்கப்பட்ட அரச காணியின் உரிமையயை உறுதிப்படுத்தல், எல்லைப் பிரச்சினைகள் பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு உரிமை மாற்றம் போன்ற வேறெதும் பிரச்சினைகள் இருப்பின் அப்பிரச்சினைகள் தொடர்பாக மாவட்ட காணி செயலணிக்குழு விசாரித்து நடவடிக்கை எடுக்கவுள்ளது. இத்திட்டத்தினைத் திறம்பட அமுற்படுத்துவதற்கு ஒத்துழைப்பினைத் தந்துதவுமாறு வடக்குக் கிழக்கு மாகாணகாணி விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் க.பரமலிங்கம் சுற்றறிக்கை மூலம் பிரதேச செயலாளர்களிடமும் உதவி அரசாங்க அதிபர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்கள் தமது காணிப் பிரச்சினை தொடர்பாக மாவட்ட காணிச்செயலணிக் குழுவிற்கு முறையீடு செய்வதற்கான படிவங்களைப் பிரதேச செயலகங்கள்/ உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம். எனவும் விண்ணப்பங்கள் 31.12.2004 ஆம் திகதியின் முன்னதாக பிரதேச செயலாளர் / உதவிஅரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பத்திரிகை விளம்பரத்தின் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவு. பூந்தோட்டம் நலன்புரி முகாம் மக்கள் அடிப்படை வசதிகளின்றி மோசமான வாழ்க்கை

## வவு.அரச அதிபருக்கு வினோ பா.உ.கடிதம்

கடந்த யுத்தம் காரணமாக வட மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் தஞ்சமடைந்த மக்கள் பூந்தோட்டம் நலன்புரி நிலையங்களில் இன்று அடிப்படை வசதிகள் இன்றி மிக மோசமான வாழ்க்கை முறையொன்றுக்குள் அகப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மிகக் கூடிய விரைவில் இவற்றுக்கு பரிகாரம் காணுமாறு தங்களை தயவுடன் கேட்டு நிற்கின்றேன். சாதாரண எளிய வாழ்க்கை முறைகளுக்கும் அப்பால் மிக மோசமான மனித வாழ்வுக்கு அப்பாற்பட்ட ஒரு வாழக்கை முறையினை அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகாரதலிங்கம் வவுனியா அரச அதிபரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.கடந்த மூன்று மாதங்களாக நிவாரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.நிவாரணத்தை நம்பிவாழும் இம் மக்களுக்கு இவை நிறுத்தப்பட்டிருப்பதால் அன்றாடம் ஒரு வேளை உணவு உண்பதற்கே கஸ்டப்படுகிறார்கள். பெரும் மழை காரணமாக கூலி வேலைக்கும் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. மலசல கூடங்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாமையினால் மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றார்கள்.கழிவு நீர் வழிந்தோடக் கூடிய ஒழுங்கான வடிகால் வசதிகள் இல்லை.

ஐந்தாம் யுனிட்டுக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு பல நாட்களாகியும் மீளவும் இணைப்பு செய்து கொடுக்கப்படவில்லை. இருளில் மூழ்கியுள்ள ஐந்தாம் யுனிட் மக்கள் பல அசௌகரியங்களுக்கு இதனால் உள்ளாகியுள்ளனர். முகாம் கூரைகள் அனைத்து (9) யுனிட்டுகளிலும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. அண்மைய மழையினால் மழை நீர் முழுவதும் வீடுகளுக்குள்ளேயே விழும் பரிதாப நிலை காணப்படுகிறது.அங்குள்ள பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் தொகைக்கு ஏறக்குறைய சமமான தொகையினர் மேலதிகமாக வசிப்பதுவும் ஏனைய மக்களின் வசதிகளில் குறைபாடுகள் ஏற்படக் காரணமாயிருக்கின்றன. அதனால் இடநெருக்கடி மற்றும் பாலியல் சம்பந்தமான அடாவடித்தனங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. முகாம்களில் தங்கியிருக்கின்ற பொலிசார் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதில்லை என புகார்கள் கிடைக்கின்றன.இவை எல்லாவற்றுக்கும் மேலாக தொடர்ந்தும் தங்களால் முகாம்களில் வாழ முடியாதெனவும், தமது சொந்த இடங்களில் தாம் மீண்டும் குடியேற அனைத்து ஒழுங்குகளும் செய்து தரப்படல் வேண்டும் எனக் கேட்கின்றார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் அனுப்பிவைத்து நலன்புரி நிலையங்களை சீரான முறையில் நிர்வகித்து அவர்களின் அடிப்படைவசதிகள் பேணப்படவும், தேவைகள் தீர்க்கப்படவும், சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அவர்களின் வாழ்வுரிமைக்கு நிரந்தரமான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன். என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

# எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிப்பதுடன் போராட்டம் நின்று விடமாட்டாது

## -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிப்பதற்கான இந்தப் போராட்டம் அத்துடன் நிறுத்தப்படமாட்டாது. இந்த நாட்டு மக்களை விடுவிப்பதற்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இதனைக் கருதுகிறோம். என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற எஸ்.பி. திஸாநாயக்கவை விடுவிப்பதற்கான ஆர்ப்பாட்டப் பேரணி யின் முடிவில் கொழும்பு ஹைபாக் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது எஸ்.பி.திஸாநாயக்கவிற்குப்பின்னால் சென்றவர் சனாதிபதி. அவரே இதனைத் தேடிக்கண்டுபிடித்து சாட்சிகளை உருவாக்கி அந்த ஒளி நாடாவை முப்பத்தொரு தடவைகள் ஒளிபரப்பியதன் பின்னர் தனக்குத் தெரிந்த மூன்று நான்குபேருடாக இது குறித்து முறைப்பாடு செய்தார்.

உண்மையிலேயே நீதி மன்றத்தை அவமதித்தது. குற்றமாயின் நீதிபதிகள் இலஞ்சம்வாங்குகிறார்கள் எனக் கூறுவது அதனை விடக் குற்றமாகும். அப்படியானால் சனாதிபதியே முதலாவது குற்றவாளியாவார். எனவும் அவர் தெரிவித்தார்.

# வவு. சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்கள் நிவாரணம் மறுப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் நலன்



புரிநிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமக்கு மூன்று மாதங்களாக நிவாரணம் வழங்கவில்லை என்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் நிலை தொடர்பாக ஆராயச்சென்ற அரச அதிகாரிகளை மக்கள் நீண்டநேரமாகத் தடுத்து வைத்திருந்தனர். கடந்த மூன்று மாதங்களாக தமக்குரிய உலர் உணவு நிவாரணம் வழங்காமையால் தாம் பெரும் இன்னலுக்குள் தள்ளப்பட்டு இருப்பதாக அந்த மக்கள் தெரிவித்தனர். உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் அப்படியில்லை என்றால் தமது சொந்த இடத்தில் தாம் மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என்று அந்த மக்கள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக ஆராய்வதற்குச் சென்ற வவுனியா அரச செயலகத்தின் திட்டமிடும் கிளையின் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன் மற்றும் அந்தக் கிளையின் கணக்காளர் ஆகியோரை நீண்ட நேரமாக எந்தவிதமான முடிவுகளும் இன்றித் தடுத்து வைத்திருந்தனர். போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்து வீதித் தடைகளையும் ஏற்படுத்தினர். அதிகாரிகள் வந்த வாகனத்தைச் செல்லவிடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர் பொலிசார் எவ்வளவோ முயற்சி செய்தும், மக்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. தொடர்ந்து அதிகாரிகள் நீண்ட நேரத்தின் பின்னர் வாகனத்தில் செல்ல அனுமதித்தனர். (21,10)

# யாழ்.கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் புலிகள் – படையினர் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டஅரசியல்துறையினருக்கும் யாழ்.மாவட்ட படைத் தலைமைக்குமிடையேயான சந்திப்பொன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவல்கத்தினில் இடம்பெற்றுள்ளது.


இச்சந்திப்பினில் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினரின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பருதி, துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கி.செம்மணன் மற்றும் தொழிற் சங்கங்களின் இணைப்பாளர் இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

படைத்தரப்பின் சார்பினில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்,பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சுமார் இரு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இப்பேச்சினில் குடா நாட்டினில் இயல்பு நிலையினைத் தோற்றுவிப்பதில் உள்ள நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவித்த விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இது வழமையானதொரு மாதாந்த சந்திப்பெனவும் தெரிவித்தார். (27,28)

# யாழ்.எரிபொருள் நிலையங்களில் திடீரென கொள்வனவு அதிகரிப்பு

திடீரென எரிபொருட்களின் விலை அதிகரிப்பது தொடர்பான செய்திகளாலும், எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவும் எனபரவும் பரபரப்பான தகவல்களாலும், எரிபொருட்களைத் தத்தமது தேவைகளுக்காக வாங்கும் நோக்கில் எரிபொருள் நிலையங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. மக்கள் மண்ணெண்ணையினைப் பெரும் கொள்கலன்களி லும், லான்மாஸ்ரர், உழவு இயந்திரம்,எல்வ் ரக வாகனங்களிலும், தகரப் பீப்பாக்களிலும் எரிபொருட்களை




வாங்குகின்றனர். இதனால் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நிரம்பி வழிந்தனர். ஆனால் எரிபொருள் நிலையங்களில் எரிபொருட்களுக்கான முன்னைய நிர்ணய விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது. இருந்தபோதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்களின் அதிகளவு கொள்வனவுக ளால் எரிபொருளுக்குத் திடீர் தட்டுப்பாடு நிலவிக் காணப்பட்டபோதும் பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தினது பவுசர் மூலம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வழங்கல் உடனுக்குடன் சீர்செய்யப்படுகின்றது. (கா)

# கல்முனையில் முஸ்லிம் வியாபாரி இனந்தெரியாதோரால் கொலை

கல்முனை பிரதேசத்தில் முஸ்லிம் வியாபாரியொருவர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் கல்முனைக்குடியைச் சேர்ந்த மொகமட் காசிம் மொகமட் நவாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சில மாதங்களுக்கு முன்பு இவரது தாயும், சகோதரியும் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்கள். கடந்த ஞாயிறு இரவு வீட்டிற்கு வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றின் பேரில் வெளியே சென்ற இவர், நேற்று முன்தினம் காலை காரைதீவில் துப்பாக்கிச் சூ[illegible]ங் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இப்பகுதியில் இயங்கும் முஸ்லிம் சட்ட விரோத ஆயுதக் குழுவினராலேயே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என விசாரனைகளை மேற்கொண்டு வரும் சம்மாந்துறை பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

-சனாதிபதி பங்கேற்ற நிகழ்வு-

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக இரு தமிழர்கைது!

ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழச்சிகளின் போது சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கண்டியில் புதிய நீதிமன்ற கட்டடத்தை சனாதிபதி திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்ற வேளை பொலிசாரின் தடைகளை மீறி முன்னேறிச்செல்ல முற்பட்டதாக தமிழ் இளைஞர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் தான் இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ளதாகவும் இருந்த போதிலும் அவரிடம் அதனை உறுதிப்படுத்துவதற்குரிய அடையாள ஆவணங்கள் எவையும் இருக்கவில்லை என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சனாதிபதி கலந்து கொண்ட மற்றுமொரு நிகழ்வு திகனவில் நடைபெற்ற போது இங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறி தமிழ் யுவதி ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்வதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

### போர்...

என்றி வைஸ்ட்ல் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார். இலங்கையில் அமைதி, சமாதானம் ஆகியன தொடர வேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. இப்படியான நிலை தொடரும்போது தேவையான உதவிகளை வழங்குவதற்குத் தயாராகவிருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

### இடைக்கால....

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் சனாதிபதியின் இந்த முடிவுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு தெரிவித்தனர் என்றும் -அவை தெரிவித்தன. (32)

### பேச்சுவார்த்தை...

உள்ள மக்கள் பாரிய இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். நீண்ட கால யுத்தத்தின் மூலம் மக்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளார்கள். பல இலட்சம் மக்கள் தொடர்ந்து யுத்தத்தினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது என்னவெனில் யுத்த நிறுத்த உடன்படிக்கை மதிக்கப்படல் வேண்டும் ,பேச்சுவார்த்தை மேசைக்கு இரண்டு தரப்பினரும் வரவேண்டும், சமாதான ஏற்பாட்டாளராகத் தொடர்ந்தும் நோர்வே சேவையாற்றும், இலங்கையிலுள்ள மக்கள் அனைவரும் சமாதானத்துடன் வாழவேண்டும், யுத்தத்தால் அழிவுற்ற பிரதேசங்கள் புனரமைக்கப்படல் வேண்டும், யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டாம் , யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது, பேச்சுகளின் மூலமே தீர்வினை எட்ட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

### எஸ்.பி...

தடுக்கும் வகையில் நேற்று காலை முதல் மாலை வரை இந்த வீதி பொதுமக்கள் போக்குவரத்திற்காக தடை செய்யப்பட்டிருந்தது. வீதி மூடப்பட்ட இடங்களில் கலகம் அடக்கும் பொலிசார் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் ஆர்ப்பாட்ங்களில் முன்னணி வகித்துக் கோசங்களை எழுப்பினார்கள். ஆளும் கட்சியில் இணைந்துள்ள இ.தொ.கா. இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அக்கட்சியின் உப செயலாளர் ஆர்.யோகராஜன் ஆர்ப்பாட்ட முடிவில் நடைபெற்றகூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். (32)

### பேச்சு

சுக்கள் குறித்த புலிகளது நிலையைஎடுத்துக் கூறினார். இந்தச் சந்திப்பின் பின்னர் சூல்ஹெய்ம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இரு தரப்பினரும் - சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பது என்று உறுதி பூண்டிருப்பது சற்று நிம்மதியான விடயம்- என்று தெரிவித்[illegible]. கிறிஸ்மஸ் திருநாள் விடுமுறையை முடித்துக்கொண்டு சூல்ஹெய்ம் அடுத்த மாத ஆரம்பத்தில் மீண்டும் தனது அனுசரணைப் பணியைத் தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தலையற்ற...

கண்டு பிடிக்கப்பட்ட இச் சடலம் சுமார் 30 முதல் 35 வயது மதிக்கத் தக்க நபருடையது இவரது தலையற்ற முண்டம் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முழுக்காற்சட்டையும், சேட்டும் அணிந்திருந்த இவர் நேற்றுக் காலையே கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சடலத்தின் வலது கையின் கமக்கட்டுப் பகுதியிலும் வெட்டுக் காயங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.சடலம் அடையாளம் காணப்படாமல் மன்னார் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (21)


## ஐந்தாம் ஆம் ஆண்டு நினைவலைகள்

மடியில் முத்தாக

20 - 02 - 1976



மண்ணில் வித்தாக

22 - 12 - 1999

**வீரவேங்கை தனம்**

நாகராசா தனஞ்சயன்

அச்சுவேலி தெற்கு யாழ்.

(விக்ரர் விசேட கவச எதிர்ப்புப்பிரிவு)

"உயிரைத் திரியாக்கி
உணர்வை நெய்யாக்கி
தாய்நில இருளகற்ற
ஒளியான உத்தமனே!
இலட்சியக் கனவுடன்
உன்பாதச் சுவடுகள் பற்றி
உன்பணி தொடர்கிறோம்....."

தகவல்:-

விசுவமடு மேற்கு,
விசுவமடு

(5432)

குடும்பத்தினர்.



**Improving Relevance and Quality of Uadergraduate Education (FRQUE) project**

**Intersive Course in English**

The students who have applied to follow the above courseare kindly requested to be present at the Kailasapathy Auditorium, University of Jaffna on 03.01.2005 at 10.00a.m

**IRQUE Project,**
**University of Jaffna,**
**Jaffna.**
**20.10.2004**

**Deputy Director/**
**Administration.**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது